www.tamilarangam.net



# சஞ்சீவி

மலர் -23

Chanchive

23-Udgave



RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE , FRANCE

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




‹‹அட்டைப்படவிளக்கம்››
- சந்தானம் -

இவர்கள் முகமிருந்தும் மறுக்கப்பட்டவர்கள்.

# சஞ்சீவி

பங்குனி - சித்திரை
மலர் - 23
1993

| பக்கம் | உள்ளடக்கம் |
|---|---|
| 3 | நோக்கு |
| 5 | சண் ஒரு வரலாற்றுத்தடையம் |
| 9 | கவிதை |
| 10 | சிறுகதை |
| 17 | கவிதை |
| 18 | கடிதங்கள் |
| 30 | கவிதை |
| 32 | பேட்டி |
| 36 | கவிதை |
| 38 | இன்றும் ஏன்? |
| 42 | கு. எ. போட்டி |
| 46 | கவிஞர் மு-மேத்தாவும்... |
| 50 | கம்யூனிசத்துக்கு... |

சஞ்சீவியின் தொடர்புகளுக்கு: Chanchive
Danmarksgade 10
7500-Holstebro.D.K

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நோக்கு

நீத்துப் போன விடயங்களே அரசியலாகிப் போன எமது தேசத்தில், அதிகம் பேர் எதிர்பாராத மரணங்கள் அண்மையிலும் நடந்து முடிந்து விட்டன. யாவரது மனங்களையும் அதிர்ச்சிக்குள்ளாக்கிய விடயங்கள் எனக் கொள்ளமுடியாதுவிடினும், இந்த மரணங்களைத் தொடர்ந்து ஏதேதோ மாற்றங்களும், புதிய இனக்கலவரங்களும் இடம் பெறலாம் என எதிர்பார்க்கப்பட்டது.

ஒரு புதிய இனக்கலவரத்தினை தென்பகுதியில் தொடங்கவும், தணிக்கவும் நாட்டின் தலைவராயிருந்து மரணிக்கப்பட்ட "பிரேமதாஸ"வினாலேயே முடியும் என்ற நிலைப்பாட்டினை நாட்டின் புதிய தலைவராய் இடம் பிடித்த "டிங்கிரி பண்டா விஜய துங்கா"வினாலும் இன்று வரை முடிந்தது என்னவோ உண்மைதான். இங்கு முக்கியமாக அவதானிக்க வேண்டியது என்ன வெனில் மக்களுக்கு ஜனாதிபதி பிரேமதாஸவின் ஆட்சியில் இருந்த நம்பிக்கைகளை விட எதிர்ப்புகளும், நம்பிக்கையீனங்களும் அதிகரித்தமையே இந்த அமைதிக்கு காரணங்களாகும்.

"லலித்" பாதுகாப்பு அமைச்சராக இருந்தபோதே தமிழ் மக்களின் பிரதேசங்களில் பாரிய விமானத்தாக்குதல்கள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. இந் நடைமுறையானது புதிய யுக்திகளுடன், பிரேமதாஸ வின் ஜனாதிபதிக் காலத்தில் ஆயிரக்கணக்கான அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்பட்டும், பல்லாயிரக் கணக்கான மக்கள் நாட்டினுள்ளும், வெளியிலும் அகதிகளாக்கப்பட்டார்கள். அத்துடன் இவர்காலத்தில் மீண்டும், மீண்டும் மக்களைப் பேய்க்காட்டி பேச்சுவார்த்தை என்ற போர்வையுள் பாரிய யுத்தத்திற்கான அபிவிருத்திகளை தேடித்தந்தார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பல தமிழ் இயக்கங்களை இந்திய அரசு வெளியேற்றிய போது அவர்களுக்கு வசதிகள், இடங்கள் கொடுத்து இலங்கை அரசின் அடிவருடிகளாகவும் ஆக்கிக் கொண்டார். அத்துடன் EPDP என்ற புதிய தமிழ் அமைப்பினை கூடிய வசதிகள் கொடுத்து பலப்படுத்தியவர். தமிழ்ப் பிரதேசங்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் கூட போகவிடாது, பொருளாதாரத் தடை விதித்தும் ஏதுமறியாத அப்பாவி மக்களையும் தினந்தினம் சாகடித்தவர். இன்றும் எத்தனையோ தடைகளையும், தாக்குதல்களையும் நடாத்தியும், இனங்கள் மத்தியில் புதிய முரண்பாடுகளை வளர்த்த பெருமையும் இவருக்குச் சேரும்.

வடக்கு-கிழக்கு பிரச்சனைகளை ஒரு பக்கமாக வைத்துவிட்டு, தென் பகுதியை நோக்கும்போது இவரது தனிநபர் பிரயோகமானது எத்தனையோ ஆயிரக்கணக்கான அப்பாவி சிங்கள மக்களை J.V.P என்ற காரணம் புகட்டி கடத்தியும், கொலை செய்தும் அழித்தமை பெரும் தாக்கத்துக்குரியதாகவிருந்தது.

மேலும் அவர் சார்ந்த கட்சிக்குள் தனது கருத்தினை மேலோங்க வைத்து தன் கருத்தோடும், தன்னோடும் முரண்பட்டோரை மிகவும் சாதுரியமாக விலகவைத்ததோடு, அண்மையில் நடந்த சில அரசியல் பிரமுகர்களின் கொலைகளுக்கும் இவர் காரணமாயிருந்தாரென அரசியற் கட்சிகளுள்ளும் மக்கள் மத்தியிலும் பரவலாக நம்பப்படுகின்றது. "தொழிலாளர் தினமான மே 1ம் நாளில்" ஜனாதிபதி பிரேமதாஸ வின் மரணம் எதிர்பாராத விதத்தில் நடந்து முடிந்துள்ளது. இருந்தும் இப்படிப்பட்ட சம்பவங்கள் இலங்கை மக்களின் பிரச்சனைகளுக்கு ஒரு போதும் தீர்வாக அமையப் போவதில்லை. இவர்களைப் போன்ற சுய நல அரசியல் வாதிகள் தொடர்ந்தும் ஆட்சியில் இருக்கும் வரை இனங்களுக்கிடையிலான பிரச்சனைகளும் தீரப் போவதில்லை.

சஞ்சீவி.

www.tamilarangam.net



# சண் ஓர் வரலாற்றுத் தடயம்

சாந்தன்..

நா. சண்முகதாசன் மறைந்து மாதங்கள் சில ஓடிவிட்டன. இன்றுள்ள யுத்த சூழலிலும் மரணங்கள் மலிந்துவிட்ட எமது மண்ணில் இந்த தனிமனிதனின் இறப்புப் பற்றி பேசப்படும் அளவிற்கு அப்படி என்ன முக்கியத்துவம் இருக்கின்றது என்றொரு கேள்வி எல்லோர் மனதிலும் எழத்தான் செய்யும். இருந்தும் நாம் வாழ்ந்த தமிழ் மண்ணில் நடந்து முடிந்த சம்பவங்களையும், சம்பவங்களுக்கு காரணமாயிருந்த போராட்டங்களை நடத்திய கட்சி பற்றியும், இயக்கம் பற்றியும் அறிந்து கொள்ளவே இந்த மனிதனின் இறப்புப் பற்றி இங்கு கூற முற்படுகிறேன்.

நா. சண்முகதாசன் தனது பட்டப்படிப்பை (வழக்கறிஞர்) முடித்தவுடன் தனது வெட்டி படுக்கையுடன் கட்சிக் காரியாலயத்திற்கு வந்து, தனது அரசியல் வாழ்வை ஆரம்பித்து இறுதிக்காலம் வரை மாக்சிய, லெனினிய மாவோசேதுங் சிந்தனை வழியில் உறுதியாக நின்று வாழ்ந்து முடித்தவரென நானும் கூறிவிட்டு விட்டுவிடலாம். ஆனால் தேடலை நோக்கிய இக்கால கட்டத்தில் கடந்தகால விடயங்கள் பல விடுபட்டுள்ளமையால் அப்பகுதியினை இச்சந்தர்ப்பத்தில் கூறுவது பொருத்தமானதாகும் என நினைக்கிறேன்.

எனவே அவரது வாழ்க்கைக் காலம் தமிழ், சிங்கள மக்களின் போராட்டங்களில் இரண்டறக் கலந்து, குறிப்பாகச் சொல்லப்போனால் தமிழ் சிங்கள முஸ்லிம் மக்கள் இலங்கைப் பாராளுமன்றத்தில் நம்பிக்கை வைத்து தேர்தலில் ஓட்டுப்போட்டு

www.tamilarangam.net

தமது பிரச்சனைகளுக்கு தீர்வு காணலாம் என்று நம்புவது முட்டாள்த் தனம் என்றும் தேர்தல் பாதையினை நிராகரித்து ஆயுதப்போராட்டத்தின் மூலமே சகல உரிமைகளையும் வென்றெடுக்க முடியும் எனக் கூறியதுடன் 60 களில் இலங்கைக் கம்யூனிஸ் கட்சிக் கொள்கையாக பாராளுமன்றம் கள்வர் குகை எனவும் முதலாளித்துவப் பாராளுமன்றத்தை நிராகரிப்போம் எனக் கூறினார். அக்காலத்தில் சாத்வீகம், காந்தியம் போன்ற கொள்கைகள் மேலோங்கிய காலகட்டம். அதுதவிர திராவிடர் கழக மாக்சிய எதிர்ப்பு நடவடிக்கைகள் மேலோங்கிய காலகட்டத்தில் ஆயுதப்போராட்டத்தின் முக்கியத்துவத்தினை பல தர்க்கரீதியான உதாரணங்களுடனும், இந்துமதக் கடவுள்களின் ஆயுதங்களைக் காட்டியும் மிக உறுதியாக விளக்கியதன் மூலம் ஆயுதப்போராட்ட மரபினை தமிழ்ப் பகுதியில் வேரூன்றச் செய்தவர் நா. சண்முகதாசன் என்றால் அது மிகையாகாது.

60 களில் சாதியக்கொடுமைக்கு எதிராக "தீண்டாமை ஒழிப்பு" போராட்டத்தினை ஆரம்பிப்பதற்கு "தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம்" என்றொரு வெகுஜன அணியினை உருவாக்கியதில் நா. சண்முகதாசனின் பங்கு முக்கியமானது. அப்போராட்டத்தின் முழக்கமாக "அடிக்கு அடி கொடுங்கள்", "தீண்டாமைக்கு எதிரான சகல சக்திகளையும் (உயர்சாதியில் உள்ள முற்போக்கு எண்ணம் கொண்டவர்கள்) ஐக்கியப்படுத்துங்கள்" எனக் கம்யூனிஸ் கட்சியின் பொதுச் செயலாளராக இருந்த நா. சண்முகதாசன் விடுத்த அறிக்கையே முதல் வேட்டாக அமைந்தது. ஆனால் அப்போராட்டம் பலவெற்றிகளை ஈட்டுவதற்கு தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் உறுதிமிக்க தலைவர்களும், சகதோழர்களும், தியாகிகளும் காரணம் என்பதும் இக்கட்டத்தில் குறிப்பிடப்படுவது முக்கியமானதாகும். ஆலயப்பிரவேசம், தேனீர்க்கடைச் சமத்துவம், பிறபொதுவிட சமத்துவங்களாக தமிழர்கள் மத்தியில், குறிப்பாக வடபகுதியில் ஒடுக்கப்பட்ட தமிழ்மக்கள் வெற்றிகளைப் பெற்றதன் பலனாக அடக்குமுறையாளர்களுக்கு அதாவது சாதிவெறியர்களுக்கு பயப்பீதியை ஏற்படுத்தியது. இதன் விளைவாக இலங்கைப் பாராளுமன்றத்தில் யாழ்ப்பாணம் குட்டி வியட்னாம் ஆகிவிட்டது. மாவோ சேதுங் யாழ்ப்பாணம் வந்துவிட்டார் என அமிர்தலிங்கம் 'எம்பி' முதல் தமிழரசு, தமிழ்காங்கிரசு 'எம்பி'கள் வரை கூப்பாடு போட்டதும், மறந்துவிட முடியாது. இக்காலகட்டத்தில் சாதிப்போராட்டத்தின் எழுச்சியை "மக்கள் சீன வானொலி நிலையம்" உலகெல்லாம் ஒலிபரப்பியதன் பயனாக சர்வதேசமுற்போக்காளர்களின் ஆதரவையும் பெற்றுக்கொண்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தது. அக்காலத்தின் சீனக்கட்சியின் (கம்யூனிஸ்) தலைவராக இருந்தவர் தலைவர் மாவோ சேதுங் என்பது இங்கு குறிப்பிடப்படவேண்டும். அப்போராட்டத்தில் தனது இன்னுயிரைத் தியாகம் செய்த பதினொரு மாவீரர்களையும் இத்தருணத்தில் நாம் நினைவு கூரக் கடமைப்பட்டுள்ளோம்.

இது இவ்வாறிருக்க மலையகப் பகுதிகளில் தோட்டத்தொழிலாளர் மத்தியிலும் பலபோராட்டங்களை நடத்தினார். இதற்கு "செங்கொடிச்சங்கம்" ஒன்றும் "தொழிற்சங்கம்" ஒன்றினையும் கம்யூனிஸ் கட்சி ஆரம்பித்திருந்தது. அக்காலகட்டத்தில் தொழிற்சங்கத் தலைவர்கள் இரவு, பகலாக உழைத்தும் கட்சிப்பத்திரிகையான "தொழிலாளி" நாளேடாக வந்ததும் குறிப்பிடத்தக்கது. இத்தகைய போராட்டங்களின் மூலம் நா. சண்முகதாசன் தோழர் 'சண்' என எல்லா மக்களாலும் அன்பாக அழைக்கப்பட்டார்.

60களில் சர்வதேச அரங்கில் எவ்வளவு முக்கியமானதோ அந்த அளவிற்கு இலங்கை தமிழ், சிங்கள மக்களின் அரசியலும் முக்கியமானது. குறிப்பாக கலை, இலக்கியத் துறைகளிலும் பலத்த மாற்றத்தினை உண்டாக்கியது. இத்தகைய மாற்றங்கள் உண்டுபண்ணக் கூடிய அளவிற்கு அந்த சாதியப் போராட்டம் அமைந்தது. அந்தக் கால நாடகங்களான 'கந்தன் கருணை", "ஐயா லெக்சன் கேட்கிறார்" போன்றவை மக்களால் வரவேற்புப் பெற்றவை. பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் (சிவத்தம்பி, கைலாசபதி, மௌனகுரு) துணிந்து தமது கருத்துக்களை சொல்ல, எழுத முடிந்ததாயின் அது அப்போராட்டத்தின் விளைவு என்று தான் சொல்லவேண்டும். அத்தகைய சமூக கலாச்சார மாற்றத்தினை ஏற்படுத்தக் கூடிய அளவிற்கு அப்போராட்டம் தொடர்பாக ஒரு பொதுக்கொள்கையை அதாவது போராட்டத்தில் மக்களை இணைக்கக் கூடிய கொள்கை, தந்திரோபாயம் இவைகளைக் கண்டறியக் கூடிய, ஊவுக்க அரசியல் (அறிவு) ஆணையிடக் கூடிய கட்சியும், அதன் பொதுச்செயலாளராக இருந்த தோழர் சண்ணும் தனது கடமையை சரிவரச் செய்து முடித்தமையே காரணம்.

சாதியப் போராட்டக் காலத்திற்கு சற்று முன்னதாக 1962இல் சோவியத் ரஷ்யாவில் ஸ்டாலின் மறைவைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்த குருசோவ், பிறஸ்நேவ் கும்பல் மாக்ஸ்-லெனின் ஆசியோரது பாதையில் இருந்து விலகி தமது திருத்தல் கருத்தாக "சமாதான- சகசீவனம்"

www.tamilarangam.net

என்ற கொள்கையை பிரகடனம் செய்தனர். இக்காலகட்டத்தில் ரஷ்சிய தலைமையினால் முன்வைக்கப்பட்ட கருத்தினால் சர்வதேச சோஷலிச முகாம் பிளவுண்டது. இதன் பயனாக இலங்கையில் இருந்த கம்யூனிஸ் கட்சியும் பிளவுண்டது.

வாசகரின் கவனத்திற்கு :- சர்வதேச கம்யூனிச விடயம் தொடர்பாக தங்கருபனின் கட்டுரை பல தகவல்களைத் தருவதால் நானும் அதையே எழுதத் தேவையில்லை என்று எண்ணுகின்றேன்.

இலங்கையில் இந்தப்பிளவில் சரியான பாதையில் முன்னெடுப்பதில் தோழர் சண் தனது பாத்திரத்தைச் சரிவரச் செய்தார். இதன் பயனாக சர்வதேச அரங்கில் தலைமைப்பாத்திரம் ஏற்ற சீனமக்கள் குடியரசில், மாவோசேதுங் தலைமையில் புரட்சியாளர் மத்தியில் பேசும் வாய்ப்புப் பெற்றார்.

நிலப் பிரபுத்துவத்தின் வழித்தோன்றலான சாதியத்தில் கை வைப்பதற்கு புரட்சியாளர்களால் தான் முடியும். ஏனெனில் சீனதேசத்தில் ஒருபுரட்சியை நடாத்திமுடித்த தலைவர் மாவோ சேதுங்கின் அநுபவங்களைக் கற்றுக் கொண்டதன் பயனாகவே அப்போராட்டத்தில் உறுதியாக கம்யூனிஸ்கட்சியினால் நிற்க முடிந்தது. இந்த நடவடிக்கைகளின் காரணமாகவும், தொழிற்சங்கப் போராட்டத்தின் விளைவாகவும் 1971ம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடந்த சேகுவராவின் பாணியிலான, விஜயவீராவின் அமைப்பால் நடாத்தப்பட்ட கிளர்ச்சிக் காலகட்டத்தில் புரட்சியைத் தூண்டிவிட்ட குற்றத்திற்காக தோழர். சண் கைதுசெய்யப்பட்டார். 1971ம் ஆண்டு சண் தலைமையிலான கம்யூனிஸ் கட்சி இலங்கை அரசினால் பலத்த அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டது. தமிழ்ப் பகுதியில் கட்சியின் தலைமைப் பாத்திரம் ஏற்ற V. A. கந்தசாமி, கார்த்திகேசன் போன்றோர் சிறீமா பண்டாரநாயக்காவுடன் சேர்ந்து கொண்டனர். இதன் பயனாக தோழர் சண்ணை கட்சியில் இருந்து வெளியேற்றிவிட்டதாகவும், செங்கொடிச்சங்கத்தில் இருந்து விலக்கிவிட்டதாகவும் பத்திரிகையில் அறிக்கைவிட்டவர்களில் முக்கியமானவர்கள் V. A. கந்தசாமி ( பின்னாளில் கரவை கந்தசாமியாக P.L.O.T தத்துவார்த்த ஆசிரியராக இருந்தவர் ) ஹெராசாரியோ ராமையா (செங்கொடிச் சங்கத் தலைவர்களில் ஒருவர்) என்பது குறிப்பிடத்தக்கது. சண் சிறையில் இருந்த காலத்தில்.....

(தொடரும்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இன்று வெளிச்சம்

மெல்ல(ப்) பொருமி
ஆடி அசைந்து
அடித்த அலை...
நண்டுகள் ஊர்ந்த தடத்தினை
கரைத்தேடும்.

பனையிடுக்கால் சலசலத்து
பாய்ந்து வந்த சோழகக் காத்து
முள்ளிப் பந்துகளை
உருட்டி விளையாடும்...
அடம்பன் கொடியும்
அதனை
அடம் பிடித்தே தடுத்து நிற்கும்.

நீலமாய் பூத்த பூக்கள்
அடம்பன் கொடியின் அரவணைப்பில்

மெல்ல(ப்) பொருமி
ஆடி அசைந்து
அடித்த அலை...
நண்டுகள் ஊர்ந்த தடத்தினை
கரைத்தேடும்.

புத்தம் புது மொட்டவிழ்த்து
புதிதாக பூத்த பூவரசம் பூவொளிரு
படுவானில்...

மெல்ல(ப்) பொருமி
ஆடி அசைந்து
அடித்த அலை
நண்டுகள் ஊர்ந்த தடத்தினை
கரைத் தேட
புளிபோட்டு விளக்கியொரு
தாம்பாளம்
எழுந்திடும் எழுவானில்

- வளவன்.

www.tamilarangam.net

# மனம் ஒன்றுதாயகம் நோக்கி...



ஹரன்

விழித்தெழுந்தும் கட்டிலால் இறங்க மனமின்றிப் புரண்டு கொண்டிருந்தான் லவன். தொலைபேசி அலறலால் குதித்தோடிய அவன் விரைவில் உரையாடலை முடித்து விட்டு பிரமை பிடித்தவன் போல் யோசித்தபடி அறையை நோக்கி வந்தான். அது அவனது நண்பன் குலத்தின் அழைப்பு. லவனுடன் வந்திறங்கிய குலம் "மச்சான் நாங்கள் வந்து இன்றுடன் மூன்று வருசமடா" என்பதைச் சொல்லவே காலை வேளையில் அந்தத் தொலைபேசி அலறல். தோளில் துவாயைப் போட்ட படி குளியலறையை நோக்கி மெல்ல நடந்தான். பழைய ஞாபங்கள் அலையலையாக மனதில் ஓடியபடி இருந்தன. இலண்டன் வருவதற்கு முன்னையவை, பின்னவை என்றெல்லாம் சொந்தமா?

அவன் அழுதவடிந்து கொண்டு பயணம் ஏறவில்லை. கழுத்திலும் காதிலும் எதுவுமின்றி அவனைப் பயணம் அனுப்ப வந்த நான்கு சகோதரிகளையும் தாயையும் பிரியமனமின்றி பிரிகின்றான் லவன். கடன் தொல்லை மேற்படிப்பு, பாதுகாப்பு என்ற பல காரணிகள் அவனை நாட்டைவிட்டு அனுப்பி வைத்தன. போராட்டத்தில் ஒருவனை இந்திய இராணுவத்திடம் பறிகொடுத்த அந்தக் குடும்பம் மற்றவனையும் அனுப்பி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விட்டு வயோதிபத் தந்தையின் அன்றாட உழைப்பில் தங்கியிருந்தது. லவனை அனுப்பியதோடு வறுமை எல்லைக் கோட்டையும் தாண்டி விட்டது. வரலாற்றுக் கடமை எனப் வெளிவந்த அவன் "குடும்பக் கடமை" எனத் தன்னை நியாயப்படுத்திக் கொண்டே கடல் கடந்தான்.

பெரியதோர் தியாகத்தைச் செய்யும் உணர்வுடன் பொறுப்பேற்கப்பட்டான் லவன், ஓர் உறவினரால். பதினேழு வருடங்களுக்கு முன் வந்தவர் அந்த உறவினர், முதன்நாளே அவனும் மனைவியுமாக நிபந்தனைகளை அட்டவணையாக வாசித்தனர். லண்டன் வாழ்வைப் பலசரக்குக் கடை ஒன்றில் வேலையுடன் ஆரம்பித்த லவன் அந்த இந்தியக் கடை உரிமையாளனின் "கசக்கிப் பிழிவால் நாலாம் நாளே வேலையை இராஜினாமாச் செய்து விட்டான். இதனிடையே வந்திறங்கிய களைதீரமுன் லண்டன் தமிழர்களின் எச்சரிக்கைகள், அறிவுறுத்தல்கள் அவனைச் சற்று ஆட்டி விட்டன. எதற்கெடுத்தாலும் "இங்கு அப்படியல்ல" என்று கூறும் அரைகுறைகளை எண்ணி நொந்தான். வெள்ளையர் அங்கீகரித்தாலும் எம்மவர்கள் அங்கீகரிக்க மாட்டார்களோ என்ற ஆதங்கம் அவனுக்கு. எத்தனையோ தடைகளைத் தாண்டி பேராதனைப் பல்கலைக் கழகத்தில் பொறியியல் பட்டம் பெற்றவன் அவன். அங்கத்தையான் படிப்பு இங்கு உதவாது எனப் பலர் அவனது பட்டத்துக்குச் "சீல்" வைத்தனர். நல்ல ஆலோசர்கட்காக அலைந்தான். ஓரளவு அரசியல் ஞானமும் உள்ள அவன் எம்மவர்கட்கு "பூர்சுவாக்கள்" என்பது எவ்வளவு பொருத்தம் என்றெண்ணினான்.

கடன் அடைக்கப்பட வேண்டும் என்ற துடிப்பு, தாய் சகோதரி கையான் கழுத்தான் எல்லாம் முதலியார் வீட்டில், இவை போக நாளாந்தம் அந்த வயிறுகட்கு கஞ்சியாவது வேண்டாமா? வறுமை கொடியது, அதுவும் இளமையில் வறுமை. அதுவும் பெண்பிள்ளைகள் அல்லவா..? யோசனையும் குளிரும் அவன் இரத்தத்தை உறைய வைத்-

www.tamilarangam.net

தன. குடும்பத்தின் ஒரே முதலீடான அவன் வேறென்ன செய்வான்.

நண்பனின் உதவியால் பலசரக்குக் கடையொன்றில் வேலை ஒன்று எடுத்து விட்டான். முதல்நாளே "அங்கு என்ன செய்தனீ" என்ற அதிகாரத் தோரணையில் கதையை ஆரம்பித்தார் அந்த வாட்ட சாட்டமான தமிழ் மனேச்சர். என்னபடிச்சனீ, எங்கே படிச்சனீ என்ற கதை தொடர்ந்தது. B.S.C எஞ்சினியரிங் என்றான் அடக்கமாக. உந்தப்படிப்பெல்லாம் இங்கை உதவாது. என்று சொறியலைத் தொடர்ந்தார் அவர். அவர் அருகே இரு "துவார பாலகர்கள்." அதாவது முதுசுகள் அவரே தஞ்சம் என்பது போல் நின்றன. லண்டனையே மனேச்சர் ஆள்கிறார் என்ற நம்பிக்கையில் பாவிகளாய் நின்றன. இவ்வாறாகப் பலவாறாக உறிஞ்சிய மனேச்சர் தம்பி "மொப்" பண்ணுவதை அண்ணைக்குக் காட்டிக்கொடு என்று கட்டளைவிடுத்தார். இப்படிப்பல சம்பவங்கள். ஒரு நாள் "பொக்கற்றாலே கையை எடும்" என உத்தரவிட்டார் மனேச்சர். "நான் ஊரிலேயே காற்சட்டை தான் போட்டனான் அதனால் தான் பழகிவிட்டது" என்று சொல்ல எண்ணிய அவன் தன்னை அடக்கிக் கொண்டான். 71ல் தரப்படுத்தலுடன் ஆரம்பித்த பிரச்சினைகள் இன்று எம்மவரிடையிலேயே ஓர் உள்ளார்ந்தத் தரப்படுத்தல், கல்விரீதியான ஓர் புறக்கணிப்பு என்பனவாக உருவாகிவிட்டதை உணர்ந்தவன் லவன்.

ஊரில் பொன்னம்மாக்கா, கந்தப்பண்ணர் கொல்லப்படுவதெல்லாம் அரசியல் முத்திரை குத்தப்பட்டுக் காணாதவை போல் விடப்பட்டன எம்மவரால் இந்த இங்கிலாந்தில். வாழ்க்கைப் பிரச்சினைகளை சுயமரியாதையை, மானத்தை எல்லாம் அரசியல் எனத் தள்ளிவிடும் தூரர்கள் உள்ள நாடு இது. பார்ட்டிகளில் அலசி ஆராயப் படும் 'மதுக்கின்ன' அரசியல் எம்மவரின் அரசியல் ஞானசூனியத்துக்கு மகுடம் சூடி நின்றது. ரோம் நகரில் இருக்கும் போது ரோமன் போல் வாழ் என்ற பழமொழியை தூரதி-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஷ்ட வசமாக எம்மவர்கள் தெரிந்து வைத்திருக்கின்றார்கள். வெள்ளையனின் பழக்கவழக்கங்களைக் கொப்பியடிக்கின்றோம் ஆனால் நாம் ஏன் அவர்களைப் போல் மனிதனை மனிதனாக மதிப்பதில்லை, கதைக்கப் பேசத் தெரிவதில்லை என அங்கலாய்ப்பான் லவன். எமக்கும், மேற்கு நாட்டவர்க்கும் இடையேயுள்ள கலாச்சார இடைவெளியையும், மொழிரீதியான இடைவெளியையும் அவர்களது மண்ணிலேயே மிகக்குறுகிய காலத்திலேயே பாய்ந்து தாண்டுவதற்கு எம்மவர்கள் எத்தனிப்பதே யாவற்றுக்கும் காரணம் எனச் சுயவிளக்கம் கொடுத்தான் அவன்.

14,15 வயது இளசுகட்கு 'ஆலோசகர்களாக' இருக்கும் அந்த 'தமிழ் வெள்ளையர்கள்' ஒன்றை மட்டும் சொல்வதில்லை. அவை வேறொன்றும் அல்ல. பள்ளிப்படிப்பு என்பதைத் தான். என்னிடமும் இல்லை, உனக்கும் அது வேண்டாம் என்ற சமத்துவக் கொள்கையே அதற்குக் காரணம். கல்வியில் அக்கறை எடுப்பவர்களை ஏளனம் செய்தார்கள். லவனுக்கு அது வழமையான ஒன்றாகிவிட்டது. இப்ப "ரிசசன்' எல்லே என்ற பொருளாதார விளக்கம் எல்லாம் பிஞ்சுவாய்களில் இருந்து வெளிவரும்.

ஆங்கிலநாட்டுத் தமிழ்ச்சித்தாந்தம் 'விளக்கம்' இன்று ஒரு புறமாய்த் துடிக்க "தமிழிஷ்" வாயில் அகப்பட்டுத் தமிழ் துடியாய்த் துடிக்கிறது. ஒரு நாள் "வட் எபவுட் அப்பச் சட்டி என்று தன் கணவனைக் கேட்ட அந்தச் சிலிப்பாத் தமிழ் வெள்ளைக் காரியின் முழக்கம் தற்செயலாக அங்கு நின்ற லவனையும் தன் தற்கால மனைவி பற்றிச் சற்று எச்சரிக்கை செய்தது.

இவற்றினிடையே தாயாரினதும் தங்கைமாரினதும் கடிதங்களைத் திரும்பத் திரும்ப வாசித்து தமிழைச் சுவைப்பதுண்டு. கண்கலங்கியபடியே அந்த வெள்ளை உள்ளங்களின் கைச்சுவடுகளை வாசிப்பான். அவன் அனுப்பும் பணத்தால் அவர்கள் வாழ்வை ஓட்டி வருகின்றார்கள்.

www.tamilarangam.net

ஒருநாள் ஒரு தமிழ்ப்பெண்ணை வயோதிபர் ஒருவர் எந்தஊர் பிள்ளை என விசாரித்தார், பழைய பிடியில். 'கலம்பு' என்பதில் வந்து கொழும்பு 'ரச்' பண்ணி வந்ததுகள். எல்லாம் கொழும்பு என்று சொல்லுதுகள் எனப் புலம்புகிறார் கிழவர். தமிழுக்கும் தமிழ் பண்பாட்டுக்கும் மரண அடி விழுகிறது, எம்மவராலேயே என்று சிந்தித்தபடி நடையைத் தொடர்ந்தான். கடையில் சிறுவர்களுடன் அன்பாகப் பழகும் அவன் படிப்புச் சம்பந்தமாக ஏதாவது சொல்வதுண்டு. ஏன் அண்ணை மனேச்சராக வந்தால் சரிதானே. ஏன் அண்ணை ஜோன் மேயர் பெரிசாய் படிச்ச.... ஓமடா உதைவிட ஊரில் சங்கக் கடையில் மரியாதையாக மனேச்சராக இருக்கலாம். கோத்தை கொப்பு உதுக்கை உங்களை இங்கு வித்துச் சுட்டு அனுப்பினதுகள். அதுகள் அறிஞ்சா நெஞ்சு வெடிச்சுச் செத்துப் போங்கள் எடா, என்று தொடர்ந்தான். நீங்கள் முந்தி வந்திருந்தால் மனேச்சர் ஆகியிருக்கலாம் அண்ணை எங்கடை மனேச்சர் மாதிரி! ஓமடா நான் வளாகத்துக்கு எட்டு வருடம் அவர் இங்கு வந்தவர் என்று முற்றுப்புள்ளி வைத்தான்.

"எதையும் 'என்ஜொய்' பண்ணுங்கோ, காரியத்திலேயும் கண்ணாயிருங்கோ" என அவன் அந்தச் சிறியவர்கட்குக் கூறுவதுண்டு. கல்வியில் ஆசியாவில் முதலிடம் வகித்த ஈழத்தமிழ்ச் சமுதாயம் கல்வி ரீதியான ஓர் சந்ததி இடைவெளியை தன்னிடையே ஏற்படுத்தி வருகிறது என உணர்ந்தான்.

பணத்தேவையால் மேலும் ஒரு பகுதிநேர வேலைக்கு 'இன்ரவியூ' ஒன்றுக்குப் போனான் லவன். பேணி அடுக்கக் கண்டறியாத ஒரு இன்ரவியூ என்று எண்ணியபடி போன அவனை ஒரு வாட்டசாட்டமான மற்றொரு தமிழ் மனேச்சர் வரவேற்றார். மொபைல் போன் ஒன்றுடன் 'பிசி' ஆக நின்ற அவர் ஆங்கிலத்தை வருந்தி அழைத்து அதிகமாக "ok" களைப் பாவித்து, தமிழையும், ஆங்கிலத்தையும் இரட்டைக் கொலை புரிந்து கொண்டிருந்தார். "முதல் நிபந்தனையாக" எனக்கு இரக்கமில்லை கோபம் வரும் வந்தால் என்ன செய்வேன்

www.tamilarangam.net

என்று எனக்கே தெரியாது என்று விளக்கினார். தம் பிழை என உணர்ந்த அவன் சமாளித்து விட்டு வீதி ஓரமாக இருந்த படி மீளநடந்தான். நாம் இலங்கையில் பெரும்பான்மையின-ராக இருந்திருந்தால் சிங்களவர் என்ன பாடுபட்டிருப்பார்கள். "நம்மவர்கள் கொம்பில்லாக் குதிரைகள் தான்" என்று எங்கோ அவன் வாசித்தது நினைவுக்கு வந்தது.

யாவற்றுக்குமிடையே அவன் 'எக்கவுண்டன்சி' பகுதி இர-ண்டும் சித்தியடைந்து விட்டான். இவைபற்றி யாரிடமும் அவன் பேசுவதில்லை. பட்டப்பின் படிப்பும் படிக்கும் திட்டமும் அவனிடம் உண்டு. கடும் முயற்சியால் பகுதிநேரமாக ஒரு கணக்காளர் நிறுவனத்தில் சேர்ந்து விட்டான். இதுவரையில் கடையில் பல்லைக் காட்டி வேலை செய்தவனுக்கு ஓர் உஷார் வந்து விட்டது.

உழுகிற மாடு ஊரில் உழ வேண்டும் என்பதே அவன் சித்தாந்தம். ஆனால் அவன் அந்நிய மண்ணையல்லவா உழு-கின்றான். ஆனால் அவன் தவறிய வரலாற்றுக் கடமையை அவன் சகோதரி செய்யப்புறப்பட்ட கதையை அண்மையில் வந்த தாயின் மடல் தாங்கி வந்தது. ஊருக்கு ஒத்தது தான் என் பிள்ளைக்கும் என தாய் முடித்திருந்தாள், அந்த மடலை. அவன் விறைத்துப் போய்விட்டான். தங்கையை ஒரு கணம் மனதில் நிறுத்தி நெஞ்சு வெடிக்க விக்கியபடி தன் சகோதரனின் படத்தை உற்று நோக்கினான். அவனது படம் வீரத்தின் விளைநில-மாக கம்பீரத் தோற்றத்துடன் சுவரில் தொங்கிக் கொண்டிரு-க்கிறது. பட்டகாலிலே படும் கெட்ட குடியே கெடும், என்பது உண்மையா..? என்று ஏங்கினான். தாம் ஆறு பிள்ளைகளும் நிலாவில் தாயைச் சுற்றியிருந்து சோற்றுக் கவளம் வாங்கி உண்ணும் போது போட்டி போடாது பொறுமையாய் இருப்பவர்கள் அந்தச் சகோ-தரன் அகிலனும், தங்கை தமிழரசியுமே. வறுமையின் நிறம் தெரிந்தவன் அவன்.

இந்த மூன்று வருடத்துக்குள் ஓரளவு சம்பாதித்து குடும்பக் கடன்களை ஓரளவு அடைத்து விட்டான். பெண் சகோதரிகட்கு

www.tamilarangam.net

ஏதாவது சேர்க்க வேண்டும் என்ற கடமையும் உண்டல்லவா? மாடாய் உழைத்தான். முயற்சியின் பரிசாக ஓர் முழுநேர பட்டயக் கணக்காளராகச் சேர்ந்து விடுகிறான். அடக்கமே உருவான அவன் இனி முயலுக்கு மூன்று கால் என்பவர்களுடன் வேலை செய்ய மாட்டான். எவ்வாறாயினும் தன்னால் இங்கு இருக்க மனம் இடம் தராது என்பதும் அவனுக்குத் தெரியும். தன் சந்ததி லண்டனில் ஆங்கிலத் தமிழர்களாக வாழ்ந்து அடையாளம் தெரியாது போ-ய் விடக் கூடாது என்ற நப்பாசை அவனுக்கு. கொள்கைகளு-க்கும் நடைமுறைகட்கும் உள்ள இடைவெளியை நிரப்ப முற்படும் அவன் சோதனைகளை எதிர்நோக்கியே ஆகவேண்டும். அன்றேல் நடைமுறைக்கேற்ப கொள்கையை வகுக்கும் "கொள்கை" அற்ற கொள்கையை அவனும் கடைப்பிடிக்க வேண்டும்.

பலவாறு சிந்தித்தபடி நினைவுகளிலிருந்து மீண்டபடி குளியலறையை விட்டு வந்த அவன் தன் மேசையில் கிடந்த அந்த ஊரில் இருந்து வந்த பாரமான கடிதத்தை ஆவலுடன் உடைக்கின்றான். ஊர்க்கடிதம் என்றால் அவன் சற்றுப் படபட-ப்படுவதுமுண்டு. என்ன செய்தியைத் தாங்கி வருமோ என்ற பயம். கடிதம் என்பது சொல்லாத ஒன்றல்லவா..?

உன் தங்கை தமிழரசி தற்கொலைப் படையில் சென்-றமாதம் சேர்ந்து பின்பு முல்லைத் தீவு இராணுவ முகாம் தாக்-குதலில் குண்டுடன் உள்ளே பாய்ந்து 70, 80 இராணுவத்-தினரைச் சாய்த்து விட்டு வீர....... அவனால் வாசிக்க முடியவில்லை. கையெல்லாம் நடுங்கியபடி தலை சுற்ற தலையைப் பற்றிப் பிடித்தபடி கட்டிலில் குலுங்கியபடி வீழ்ந்தான் யாருக்குச் சொல்வான்.

அவளைப் பயணம் ஏற்ற வந்து கண்கலங்கியபடி கையை அசைத்துக் கொண்டு அந்தச் சீத்தைச் சட்டையுடன் நின்ற காட்சியை அவன் எப்படி மறப்பான்? வாழ்வுக்கே பயணம் சொல்லி விட்டாளே. சிட்டுப் போல் ஓடித்திரிந்தவள் இந்தப் பதினேழு வயதில் எவ்வளவு தியாகத்தைச் செய்து விட்-டாள். அந்த வறிய குடும்பம் கஞ்சி குடித்தாலும் தன்மானமும்

(தொடர்ச்சி பக்: 22)

www.tamilarangam.net

## இளவாலை விஜேந்திரன்

# ஆண்ட மொழியிலும்
# ஆண்ட பரம்பரையின் மொழியிலும்
# ஒரு கவிதை

'நாட்டைக் காப்பாற்ற
அனைவரும் திரளுங்கள்'
என்பது தான்
ஆளும் மொழியிலும்
ஆளப்படும் மொழியிலும்
வருகிற
பத்திரிகைச் செய்தி
"யாரிடமிருந்து காப்பாற்றுவது?"
"கொலைகாரரிடம் இருந்து
காப்பாற்ற வேண்டாமா?"
"YES YES" (காப்பாற்றத்தான் வேண்டும்)
"தரகர்களிடமிருந்து
காப்பாற்ற வேண்டாமா?"
"YES YES"
"விபச்சாரிகளிடமிருந்து
காப்பாற்ற வேண்டாமா?"
"YES YES"
"சுரண்டுவோரிடமிருந்து
காப்பாற்ற வேண்டாமா?"
"YES YES"
அந்நியர்களிடம் இருந்து
காப்பாற்ற வேண்டாமா?"
"YES YES"
"அநியாயம் செய்வோரிடமிருந்து
காப்பாற்ற வேண்டாமா?"
"YES YES"
"இனியென்ன கேள்வி?"
"காப்பாற்றிக் காப்பாற்றி
யாரிடமே ஒப்படைப்பது?"
"வழிப்பறிக் கொள்ளையரிடம்
ஒப்படைக்கலாம்"
"YES YES"
"வழிப் பறிக் கொள்ளையைச்
சட்டபூர்வமாக்க
சட்டமூலத்தில்
திருத்தம் செய்யலாம்"
"YES YES"
"இனியும் ஏதும்
கேள்வி இருக்கிறதா?"
"No No"

www.tamilarangam.net

# கடிதங்கள்

அன்பான ஆசிரியர் குழுவிற்கு,

மலர் 22 கைக்கு எட்டியது. இதழின் தரம் மாதத்திற்கு மாதம் அதிகரித்து செல்லும் சூழ்நிலை காணப்படுவது வளர்ச்சிக்குரியது. சாந்தன், உதிசபாபதி, மீரா போன்றவர்கள் தரமான முறையில் எழுதுகிறார்கள். சௌந்தரின் ஓவிய ஆற்றல் பாராட்டுதற்குரியது.

மேலும் மலர் 21ல் நான் சஞ்சீவி ஆசிரியருக்கு எழுதிய கடிதத்தை ஜேர்மனியிலிருந்து திரு.யோகன் மேலோட்டமாக வாசித்து விட்டு மேலோட்டமான சிந்தனையை வெளிப்படுத்தியுள்ளார் "தீவிர புலி ஆதரவாளன்" என்று. விமர்சனம் என்பது கருத்துக்கள் ஆழமாக ஆராயப்படவேண்டும். ஆனால் இங்கு ஆள் நியாயப்போலிக்கே முக்கியப்படுத்தப்பட்டுள்ளது. அதாவது கருத்தைப்பாராது கருத்தைக் கூறியவர் மீது முறையின்றிச் சாடுவதாகும்.

என்னுடைய வாதமெல்லாம், புலிகள் தம்மைப் பழிவாங்கி விட்டார்கள் என்பதற்காக அப்பாவி தமிழ் மக்கள் மாற்று இயக்கங்கள் சிங்கள இராணுவத்துடனும், இந்திய இராணுவத்துடனும் சேர்ந்து பழி வாங்கிய செயலானது தமிழீழ வரலாற்றில் மிகக் கறைபடிந்த அத்தியாயம் ஆகும். இந்த நேரத்தில் புலிகள் இத்தகைய நடவடிக்கைகளைச் செய்யவில்லையா? என்ற கேள்வி எழலாம். ஆனால் மக்கள் கொடுமைகளின் அளவுகளை கணிப்பிட்டு ஆதரவளிக்க வேண்டியிருந்தது. இத்தகைய ஆதரவுகளின் மூலம் எதனை, எவ்வளவு காலம் பெற்றுக் கொண்டார்கள் என்பது வரலாற்று அறிஞர்களால் ஆய்வுக்கு உட்படுத்த வேண்டிய விடயம்.

நன்றி.

செல்வா_சின்னத்தம்பி
லண்டன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நட்புடன் சஞ்சீவி ஆசிரியர் குழுவினருக்கு! 27-01-1993

வணக்கம். சுவடுகள் (ISSUE NO 39. OCTOBER '92) இதழில் உங்கள் சஞ்சிகைக்கான அறிமுகம் பார்த்தேன். அதில் அவர்கள் டென்மார்க்கில் நீண்ட காலம் தொடர்ச்சியாக வெளிவரும் மாத சஞ்சிகை. கலை, இலக்கிய, அரசியல் விடயங்களில் ஈடுபாடு காட்டுகிறதெனக் குறிப்பிட்டிருந்தார்கள். புலம் பெயர்ந்த தமிழர்களால் பல சஞ்சிகைகள் நடாத்தப்படுவதையும், சில பத்திரிகைகளுடன் தொடர்பும் கொண்டிருந்த, அறிந்திருந்த எனக்கு இது ஆச்சரியமாகவே இருந்தது. ஏனெனில் சஞ்சீவி பற்றி நான் சுவடுகள் மூலமே அறிந்திருந்தேன். மேலும் நான் அறிந்தவரையில் டென்மார்க்கிலிருந்து வெளிவரும் இதழ் இதுவாகத்தான் இருக்க முடியும் என நான் எண்ணுகிறேன். சுவடுகளும் எனக்குக் காலம் தாழ்த்தியே கிடைத்தது.

அண்மையில் தூண்டில் (53,54) கிடைத்தது. "நூறு பூக்கள்" பகுதியில் மு.நாகேந்திரம் என்பவர் "ஐரோப்பியச் சஞ்சிகைகள்" என்ற தலைப்பில் சஞ்சீவி பற்றியும்" அனைத்தையும் விமர்சனத்திற்குள்ளாக்கி, தேடலை நோக்கிய" சஞ்சிகையெனக் குறிப்பிட்டிருந்தார். அவர் குறிப்பிட்ட சஞ்சிகைகளில் அகதி, சஞ்சீவி தவிர்ந்த ஏனையவை பரிச்சயமானவை.

இப்படியான தரத்தில் வரும் சஞ்சிகைகளை வாசிக்கும் எங்களைப் போன்றவர்களின் பொருளாதார நிலை உங்களுக்குச் சொல்லத் தேவையில்லைதானே. எனவே உங்களுக்கு எங்களால் பொருளாதார ரீதியில் எவ்வித உதவியும் செய்யவியலாதவர்களாகவேயுள்ளோம். ஆயினும் ஒரு மலரை வெளிக் கொணர்வதில் உள்ள சிரமங்கள் (பணக்கஷ்டம் உட்பட) தெரியும். அதை முற்றாகவே உணர்ந்துள்ளோம்.

எங்கள் நண்பர் குழாமில் பலர் ஆக்கதாரிகள். சந்தர்ப்ப சூழ்நிலைகள் அவர்களை, ஏன் எங்கள் எல்லோரையுமே மௌனிகளாக்கியுள்ளது. பல சிக்கல்களின் மத்தியிலேயே வாழ்க்கை எங்கள் அனைவர்க்கும் நகர்கிறது. உங்கள் நிலையாவது (ஐரோப்பிய நாடுகளுக்குப் புலம் பெயர்ந்தவர்கள்) சற்றுப் பரவாயில்லை. நாங்கள் சொந்த நாட்டிலேயே திக்கற்ற அகதிகள். எல்லாச் சுதந்திரமும் மறுக்கப்பட்ட (பறிக்கப்பட்டவல்ல, ஏனெனில் பறிக்கப்பட்டிருப்பின் கேட்டுப் போராடும் சுதந்திரமாவது இருக்கும்) அடிமைகள். அன்று இலக்கியத்தில் மௌனம் சம்மதத்திற்கு அறிகுறி. இன்றோ இலங்கையில் மௌனம் (ஓரளவு எல்லோர்க்கும் சிங்களவர், தமிழர்கள் வேற்றுமை இதில் இல்லைப் போல் தான் தெரிகிறது) அவரவர் உயிர் வாழ்தலுக்கு, அதாவது சுய இருத்தலுக்கு முன் நிபந்தனை. அச்சாரம் மேலும் அன்று வடக்குக் கிழக்கில் விவசாயிகள் தான் வான் பார்த்தார்கள். இன்று, அவர்களை அன்று கணக்கிலெடுக்காத அனைவருமே வான் பார்க்க வேண்டிய நிர்ப்பந்தம். இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கு நாளை என்பதே நிச்சயமற்றதொன்று.

www.tamilarangam.net

12.03.1993

சஞ்சீவி இதழ்கள் (20,21) 02.3.93 எழுதிய கடிதமும் கிடைக்கப் பெற்றேன். அதற்கு முதற்கண் நன்றிகள்.

பிறதேசத்தில், அதுவும் தமிழர்களை விரல் விட்டு எண்ணக்கூடிய தேசத்தில் தமிழில் பற்று வைத்து பல ஆக்கங்களைத் தமிழில் செய்தவன் தமிழ்ப் பரிச்சய-மேயற்று இருப்பதென்றால் எவ்வளவு கொடுமையானது என்பது உங்களால் உணரக்கூடியது தானே. அதனால்தான் புலம்பெயர்ந்தோர் இதழ்களுக்கு அவ்வேண்டுகோளை விடுத்திருந்தேன். அதற்கு நீங்கள் செவிசாய்த்து, மதித்துப் பதிலளித்திருப்பது எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியை தந்திருக்கிறது.

சஞ்சீவி சமூகப் பிரக்ஞை உள்ள இதழ் என்பதில் சந்தேகமில்லை. தமிழை அழிய விடாமல் காப்பாற்ற எடுக்கும் சிரத்தை மனதை நெகிழவைக்கிறது. இதழ் 20 பெரிதாக விமர்சிக்க இயலாதுள்ளது. காரணம் 90% மான விடயங்கள் டென்மார்க்கில் தமிழ், சஞ்சீவி பற்றியே உள்ளமையால். அவ்விபரம் தெரியாமையினால் எம்மால் விமர்சிப்பது கடினம். எமக்கு ஒரு தகவல் களஞ்சியம் போன்றே உள்ளது. தொடர்ந்து வரும் காலங்களில் ஒரு நிலையான, சரியான நிலைப்பாட்டிற்கு வரலாம் என எண்ணுகின்றோம். "புலம் பெயர்ந்தோர் இலக்கியம்—பார்வையும் பதிவும்" கட்டுரை தொடர்ந்து வெளியிடப்படாமையினால், அரைகுறையாக அந்தரத்தில் நிற்பது போல் தோன்றுகிறது. இடம் பெற்ற கவிதைகளில் இன்னும் கூர்மை வேண்டும்.

இதழ் 21ல் மறைந்த டாக்டரும், ராணுவ நிபுணரும், சர்வதேசவாதியும், கவிஞருமான சேகுவாராவிற்கு அஞ்சலி செலுத்தியிருந்தீர்கள். சேகுவாராவின் கவிதை அற்புதம். "சேகுவாரா நினைவாக..." நன்றாக இருந்தது. "நெருடல்" சிறுகதை வெளிநாடுகளில் வாழ் இயக்க அபிமானிகளின் நிலையைக் கூறி அவர்கள் என்றுதான் இந்த மாயையிலிருந்து மீளுவார்கள் என்ற ஏக்கத்தை கொடுத்தது. செல்வனின் "கல்லூரி நண்பனுக்கு..." எமது பாடசாலை வாழ்க்கையை ஒரு முறை மீட்டிப்பார்க்க வைத்தது. வேதா லங்காதிலகத்தின் "மொழியை கட்டியெழுப்பும் பங்கு என்பது குழந்தையை முற்றுமுழுதாக ஊக்குவிப்பதாகும்" உளவியல் சார்ந்ததாக இருந்தது. பெற்றோர்கள் பரீட்சித்துப் பார்க்கலாம். மீராவின் தொடர் நவீனமான "சதுரங்கம்" நீள் கதை போல் தெரிகிறது. ஆயினும் பல உண்மைகளுக் கூடாகச் செல்வதை மறுப்பதற்கில்லை. "அஞ்சல் நூலகம்" நல்ல முயற்சி போல் தோன்றுகிறது. க. ஆதவனின் "காதல் மலர்களைக் கூட..." ஒவ்வொரு தமிழனதும் ஆதங்கம் போலுள்ளது. ஆனந்தியின் "பிறக்கட்டும் புதிய ஆதாமும், ஏவாளும்" சாதி முறைக்கு சாவுமணி அடிக்குமா? சாதி காலங்காலமாய் கடல் கடந்தும் தொடரும் கொடுமை. கடிதங்கள் பகுதியில் இடம் பெற்ற இரண்டாவது கடிதம் சமூகப் பிரக்ஞையற்று, நடுநிலை நீங்கி, இயக்க சார்பாக எழுதியது வருந்தத்தக்கது. சேந்தன் விடுதலை செய்யப்பட்டு விட்டதாக நம்பகமான தகவல்கள் கிடைத்துள்ளன. உதிசபாபதியின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"எழுந்தும் முகங்களும், அல்லது முகங்களும் சாயங்களும்" கடிந்து விமர்சிக்க வேண்டியதென எதிர்பார்க்கிறேன். இது அவரின் கருத்தென எடுக்கப்படலாமேயன்றி தீர்வாகக் கொள்ளமுடியாதது. ஸ்ரீலங்காவில் டெனிஸ் செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதியின் விஜயம் தலைகால் புரியாத ஒன்றாக உள்ளது. ஒரு கோர்வையின்றி, என்னவிடயம் என்று விளங்கிக் கொள்வதே கடினமாக உள்ளது.

24-03-1993

கடந்த 22-03-93 சஞ்சீவி இதழ் 22 வந்து சேர்ந்தது, நன்றிகள். முதற்கண் வாசித்தேன். மகிழ்ச்சி, அதன் தொடர்பில் விமர்சனமும், எனது சில கருத்துக்களும்.

தங்கரூபனின் "நோபல் பரிசு" திரை மறைவில்.... நான் அறியாத பல செய்திகளைத் தந்துதவியது. அது தொடர்பில் இன்னும் ஓர் செய்தி நோபல் பரிசைவிட மூப்பது இலட்சம் குறோனர்களை நோர்வேஜிய அரசு ரிகபெட்டா மெஞ்சுவிற்கு வழங்கியதாகக் கேள்விப் பட்டேன். கடிதங்கள் பகுதியில் இடம் பெற்ற அனைவரின் கருத்துக்களில் பெரும்பாலானவற்றுடன் எனக்கு உடன்பாடுண்டு. ஜேர்மனி யோகனின் கடிதத்திற்கு பதில் கடிதங்கள் தொடரும் என எதிர்பார்க்கின்றேன். தங்கரூபனின் "பேரு: கெரில்லாத்தலைவர் குஸ்மான் கைது! இதுவரை வெளிவராத பல தகவல்களுடன் விபரமாக இருந்தது. மீராவின் தொடர் நவீனம் நன்றாக முடிந்திருந்த போதிலும், எதுகை, மோனைக்காய்த் திணித்திருந்த சிலவற்றைத் தவிர்த்திருக்கலாம். வேலணையூர் பொன்னண்ணாவின் "யார் தவறு" நியாயமெனினும் முடிவு....? அருள் நேசனின் "விட்டு விடுதலையாகி..." ஒரு உணர்வு மீட்டல். உதி சபாபதியின் "ஹோமா" எனக்குப் புரியவில்லை. தங்கரூபனின் 'கம்யூனிசத்திற்கு சாவுமணி அடிக்கப்பட்டுவிட்டதா?" தொடராக வாசிக்காமையினாலும், அலன் அலோஷியஸின் "நினைவில் என்றும் பூக்கும்" அனுபவமின்மையாலும், நாட்டமின்மையாலும் என் விமர்சனப் பரப்பிற்கு வெளியிலேயே நிற்கிறது.

மார்க்ஸிஸம், சமூக விஞ்ஞானக் கண்ணோட்டத்தில், யதார்த்தரீதியில் எப்பிரச்சினையையும் அணுகுவது மிகச் சிறந்தது என்பதில் ஐயமில்லை. ஆயினும் மார்க்ஸிஸம் கால, தேச, வர்த்தமானத்துடன் சம்மந்தப்பட்டது என்பதை கார்ல் மார்க்ஸே தனது இயங்கியல் தத்துவத்தின் ஆரம்பத்தில் கூறியுள்ளார். இவ்வகையில் இலங்கைக்கான மார்க்ஸிஸம் எவராலும் சரியானவகையில் எழுதப்படவில்லை என்றே எண்ணுகிறேன். முதலில் இலங்கைக்கு இசைவான மார்க்ஸிஸம் இயற்றப்பட்ட பின்பே இலங்கைப்பிரச்சினைகளை மார்க்ஸிஸக் கண்ணோட்டத்தில் அணுகலாம்.

அதை விட்டு விட்டு, சீன, ரஷ்ய மார்க்ஸிஸத்தின் கண்ணோட்டத்தில் பிரச்சனைகளை அணுகின் பலன் இராதென்றே எண்ணுகிறேன். ஏனெனில், புலிகள் தேசியமா, பாசிசமா என மார்க்ஸிஸம் மூலம் ஆராயப்புகுந்தவர்கள் எடுத்துக்-

www.tamilarangam.net

கொண்ட விடயத்தை விட்டு விலகி ஒருவரின் மார்க்ஸிஸத்தை மற்றவர் விமர்சிப்-
பதில்தான் வந்து நிற்கிறது. புலம் பெயர்ந்தோர் படைப்புக்களில் இடம் பெறும்
புலிகள் பற்றிய விடயங்களை வாசித்து வருபவர்களுக்கு இது தெளிவாகப்
புரியும் என எண்ணுகின்றேன்.

சஞ்சீவியின் "நோக்கும்", சாந்தனின் "சமூக முன்னோட்ட-
மும் முற்போக்காளர்களும்" (தூண்டிலில் இருந்து மறு பிரசுரம்) ஒரே
நோக்கையே கொண்டவையும் தற்போது தேவையானவையும். ஆனா-
ல் சாத்தியமானதா என்பதே கேள்வி. ஏனெனில் நோர்வேயில்,
நோர்வேஜிய அரசால் அகதிகள் வெளியேற்றப்படுவதைத் தடுப்பதற்
கென ஒன்று கூடிய அமைப்புக்கள் மத்தியில் ஏற்பட்ட பிரச்சனைக-
ளை "சுவடுகள்" (ISSVE NR: 40) வெளியிட்டிருந்தது. அதனைப் பார்
க்கும் போது தமிழன் எங்கிருப்பினும் அவனிடையே ஒற்றுமை சாத்-
தியமில்லை என்றே தோன்றுகிறது. எனினும் தளராது தொடரும் இல-
க்கிய சந்திப்புக்களில், இவ்விடயத்திற்கு முயன்றுபார்க்க உங்களை வேண்-
டுகிறேன். இம் முயற்சி சாத்தியமானால் பல விடயங்களைச் சாதிக்கலாம்.
சந்தேகமில்லை.

"அன்பான வாசகர்கட்கு வேண்டுகோள் விடுத்திருந்தீர்கள்."
கண்ணில் உவருநவி மனதைத் தொடுகிறது. உதவ அவா எழுகிறது. ஆனா-
ல் வெறுங்கை முழம் போடமுடியாது தானே? ஆயினும் உங்களுக்கு உதவி
கிடைத்து உங்கள் பணிகள் மேலும் உத்வேகத்துடன் தொடர என் உளமா-
ர்ந்த பிரார்த்தனைகள்.

சஞ்சீவி 22 கணணி அச்சுப் பதிவின்றி கையெழுத்தில்
வந்திருப்பதனால் சுட்டிக்காட்டக் கூடிய தவறுகள் எதுவும் இல்லை
என்பதில் பெரும் திருப்தி. தொடரட்டும் உங்கள் பணி.

நட்புடன்
யா. மணிவண்ணன்.

---

(16ம் : பக்கத் தொடர்ச்சி.)

வீரமும் மிக்கவர்கள் என்பதை இருவரும் காட்டி விட்டனர்.

அவன் குடும்பம் தியாகம் செய்து விட்டது. அவனும்
ஒருநாள் தன் மண்ணுக்காகப் போகப் போகிறான். அவர்க-
ளைப் பெற்ற அந்தப் பெற்றோர்கள் கொடுத்து வைத்தவர்-
கள் வணங்கப்பட வேண்டியவர்கள்.

(முற்றும்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

27-03-93

சஞ்சீவி ஆசிரியர் குழுவிற்கு!

- -

நோக்கில் நீங்கள் புதிதாக கண்டு பிடித்திருக்கும் "E.P.D.P" என்ற இயக்கத்தின் பெயரை தமிழில் விரிவாக தரமுடியுமா? கடந்த இதழில் செல்வாவின் ஆக்கத்தினை விமர்சித்த யோகன் பிழைகளை திருத்தும் வேலை சஞ்சீவிக்கு வேண்டாம் என்று சொல்வதற்கு யோகனுக்கு எந்த உரிமை உண்டு? செல்வாவின் ஆக்கத்தினை ஆசிரியர் குழு புரிந்து கொள்ளவில்லையா? அல்லது உங்களில் ஒருவரான யோகன் புரிந்து கொள்ளவில்லையா? செல்வாவின் கருத்தினை ஏற்றுக் கொள்ளமுடியாத யோகன் ஏன் அதற்கு பதிலாக தனது கருத்தினை முன்வைக்க தவறிவிட்டார்.

ஒரு எழுத்தாளரை கேலி செய்யும் சொற்களை(உதாரணம்:- பைத்தியக்காரன்) தணிக்கை செய்யத் தெரியாமல், வரும் ஆக்கங்கள் அத்தனையும் அவ்வாறே பிரசுரிப்பதாயின் உங்களை "ஆசிரியர்கள்" என்று சொல்வதைவிட "பிரசுரிப்பாளர்கள்" என்று சொல்வது பொருத்தமானது.

இதழ் 21ல் கொட்டை எழுத்தில் 44ம் பக்கத்தில் "மேற்கண்ட ஆக்கம் தொடர்பாக வாசகர்களிடமிருந்து கருத்துக்களை எதிர்பார்க்கிறோம்!" என்று எழுதியபோதே மீண்டும் ஆசிரியர் குழுவே சண்டைக்காட்சியை ஆரம்பிக்கிறது என்று என்மனதில் தோன்றியது. ஏன் ஒரு போதும் இல்லாமல் குறிப்பிட்ட ஆக்கத்திற்கு மட்டும் விமர்சனம் தேவைப்பட்டது.

சஞ்சீவியை 56 பக்கங்களுடன் பொலிவாக வருவதற்கு ஆக்கங்களை தந்துதவிய தங்கருபனுக்கு நன்றி கூறகடமைப்பட்டுள்ளீர்கள். "பேருவில் குஸ்மன்," "ரஸ்யாவில் ஸ்டாலின்" இவ்விரு ஆக்கங்களுக்கும் 14 பக்கங்களை ஒதுக்குவதைவிட எமது நாட்டில் பசியினாலும், கொடிய போரினாலும் உயிரிழந்து கொண்டிருக்கும் மக்களின் இன்றைய நிலையினை பற்றி ஆசிரியர் குழுவால் ஒரு ஆக்கம் வெளியிடப்பட்டிருந்தால் மகிழ்ச்சியினை தந்திருக்கும்.

குறுக்கெழுத்துப் போட்டியில் பிரயோகிக்கப்படும் சொற்கள் அன்றாட வாழ்க்கையில் பாவிக்கும் சொற்களாக இருப்பது நல்லது. கு.போட்டி 18ல் உ+மாக: சமதை, சோளிகை, மாசிகைபோன்ற சொற்

களை தவிர்ப்பது நல்லது. மலர் 22ஆம் கு. போட்டிக்கு நீங்கள் கொடுத்திருந்த விடயங்களில் மேலிருந்து கீழாக சந்தைக்கு அங்டி என்று எழுதியுள்ளீர்கள். இது மனவருத்தத்திற்கு உரியது. இதற்கு சரியான சொல் அங்காடி. இவ்வாறாக பிழைகளை தவிர்க்கவும்.

இப்படிக்கு
கர்ணன்.

21-4-93

அன்புடன் சஞ்சீவிக்கு,

காலம் தாமதித்த உனது 22 வது பிரசவம் என் கைக்கு கிட்டியது. கேளிக்கைகளும், பொய்மைகளும் கரகாட்டம் ஆடிக்கொண்டிருக்கும் இக்காலகட்டத்தில், நிசத்தை, நிதர்சனத்தினை அழகியலுடன் வெளிக்கொண்டுவருகின்ற ஓர் பத்திரிகையின் வெளியீட்டில் தாமதம் தானாகவந்து சேரும். இதில் வியப்பேதுவும் இல்லை. உண்மையை நேசிக்கும் மனிதர்களைப் போல் உனக்கும் பணமுடைதான் காரணமென அறிந்தேன் கவலைதான்.

இந்த தடவை திரு. தங்கரூபன் அவர்கள் கிட்டத்தட்ட சஞ்சீவியின் பக்கங்கள் முழுவதினையும் ஆக்கிரமித்திருந்தார். ஏன் அப்படி? ஆனால் அத்தனையும் மனிதநேயமிக்க விடையங்கள் தான். தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்ற "கம்யூனிசத்திற்கு சாவுமணி அடிக்கப்பட்டுவிட்டதா?" என்ற கட்டுரை உண்மைக்கு புறம்பான ஒரு விடயமல்ல, ஆனால் பல பத்திரிகைகளிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு தொகுப்பு போல் அமைந்துள்ளது. நான் என்ன சொல்லவருகிறேன் என்றால் "கம்யூனிசம் என்றால் என்ன?" பொதுவுடைமை என்றால் என்ன? இவற்றை முதலில் விளக்கிவிட்டு தொடர்ந்து சென்றிருந்தால் பலருக்கு விளங்கிக் கொள்ள இலகுவாக இருந்திருக்கும். இது ஓர் தினக்குறிப்பினை படிப்பதுபோல் அமைந்துள்ளது. அடுத்துவரும் இதழ்களில் திருத்தத்தினை எதிர்பார்க்கிறேன்.

திரு. மீரா அவர்கள் தானே முறுக்கிய கடிகாரத்திற்கு தானே பயந்து ஓடிக் கொண்டிப்பதுபோல் மீண்டும் தலைகாட்டியிருந்தார். ஆனால் அவரின் பாணி அலாதிதான்.

கவிதைகளைமட்டும் இதுவரை பிரசவித்துக் கொண்டிருந்த திரு. உதிசபாபதி அவர்களின் "ஹேமா" சிறு கதை படித்தேன் எங்களது (டென்மார்க் வாழ் அல்லது ஐரோப்பிய வாழ் தமிழ்) சமூகத்திலுள்ள ஓர் பிரச்சனையை படம் பிடித்து காட்ட வந்துவிட்டு ஏனோபயந்து

www.tamilarangam.net


கவிஞரையும், முகமட்டையும் இழுத்துவைத்துக் கொண்டார். ஏன் ஓர் கந்தப்புவும், வள்ளிப்பிள்ளையும் இவர்கண்ணில் படவில்லையா? அல்லது முகமதியாரை மட்டும் கொச்சப்படுத்தும் ஓர் முயற்சியா? முகங்களும் சாயங்களும் எழுதியவர் அவர்தானே, இருப்பினும் நண்பரின் சிறுகதை சிருஷ்டிப்பிற்கு என்வாழ்த்துக்கள்.

தொடர்ந்துவரும் இதழில் இன்னும் இன்னும் பரிணமிப்புகளை எதிர்பார்க்கின்றேன். என்றும் நான் உன் அன்பான வாசகன்.

அன்புடன்
கரவைதாசன்.

"சஞ்சீவி" ஆசிரியருக்கு!

"சஞ்சீவி" மலர் 22ல் வெளியான ஆசிரியர் கட்டுரையினைத் தெளிவாக வாசித்து அறிந்து கொண்டதற்கேற்ப இங்கு எனது கருத்துக்களை வாசகரிடம் பகிர்ந்து கொள்ளவிரும்புகிறேன்.

டென்மார்க்கில் அகதிமுகாம்களில் உள்ள தமிழர்கள் உண்ணாவிரதம் இருந்தபொழுதும் அதற்கு முன்னரும், பின்னருமாக ஹேர்ணிங் டெனிஷ் தமிழ் தோழமை ஒன்றியமும், டெனிஷ்-தமிழ் தோழமை ஒன்றியங்களுக்கான ஒருங்கிணைப்பும் எந்தவகையில் தமது பங்களிப்பைச் செய்தன என்பதையும், செய்துகொண்டிருக்கின்றன என்பதையும் இச்சங்கங்களின் தமிழ்ச் செயலாளர் என்ற வகையில் முக்கியமான சில தகவல்களைக் குறிப்பிடவிரும்புகிறேன்.

1990ம் ஆண்டில் இருந்து கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்டுவரும் அரசியல் மாற்றங்களினாலும், நெருக்கடியினாலும் மேற்கு ஐரோப்பிய நாடுகளில் அகதி அந்தஸ்து கோரிவருபவர்களில்.. அநேகமானோருக்கு அவர்களது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டு வருகிறதென்பது யாவரும் அறிந்த விடயமாகும். அதனைத் தொடர்ந்து டென்மார்க்கிலும் அதேபிரச்சனை பாரியளவில் இடம்பெற்று வருகின்றன.

எமது ஒன்றியங்கள் 1990ம் ஆண்டுக்கு முன்னரும், அதற்குப் பின்னரும் முடிந்தளவுக்கு அதிகார சபைகளுடன் தொடர்பு கொண்டு அவர்களுக்கு வேண்டிய தகவல் அறிக்கைகளை அனுப்பிக்கொண்டிருக்கும் அதேவேளை, அகதி அகதி அந்தஸ்து கோரி எதுவிதமான முடிவும் கிடைக்காத நிலையில் இருக்கும் எமது தமிழ் மக்களை நேரடியாகச் சந்தித்து, அவர்களின் பிரச்சனைகளைப் பற்றிக் கலந்துரையாடி இருக்கிறோம். அது மட்டுமல்லாது அவர்களின் வழக்கறிஞர்களுடன் தொடர்புகொண்டு அவர்களிடமும்

www.tamilarangam.net

இப்பிரச்சனையைத் தெளிவுபடுத்திக்கொண்டிருக்கிறோம். உதாரணமாகத் தமிழ் அகதிகளின் வழக்குகளுக்காக வாதாடும் வழக்கறிஞர்கள் ஒன்பது பேருக்கு கடந்த மூன்று வருடங்களாக அவர்களுக்குத் தேவையான, அதாவது அவர்களின் வழக்குகளுக்குச் சாதகமான தகவல் அறிக்கைகளைச் சேகரித்து அனுப்பிக் கொண்டிருக்கிறோம்.

இது தவிர தமிழ் அகதிகள் கொழும்பில் வாழ முடியாது என உறுதிப்படுத்தி, அதற்கு ஆதாரமான அறிக்கைகளை அகதிகள் விண்ணப்ப மனுந்திமன்றம், வெளிநாட்டமைச்சின் அகதிகள் பிரிவு, மற்றும் வெளிநாட்டவர் இலாகா, போன்றவற்றிற்கு அனுப்பிக் கொண்டிருக்கிறோம்.

அப்படியிருந்தும் கடந்த ஆடிமாதத்தில் இருந்து அகதி அந்தஸ்து கோரி வரும் தமிழர்களை இலங்கைக்குத் திருப்பிஅனுப்ப வேண்டும் என டென்மார்க் அதிகாரசபையானது அவர்களது விண்ணப்பத்தை நிராகரித்து வருகிறது. ஆகவே எமது டெனிஸ்-தமிழ் ஒன்றியங்களின் ஒருங்கிணைப்பானது கடந்த 11.12.1992ல் ஐக்கியநாடுகள் சபையின் அகதிகள்பிரிவு உயர்ஸ்தானிகருக்கு அகதி அந்தஸ்து கோரி வரும் தமிழ் அகதிகளின் நிலைமையை விளக்கி கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தது. இக்கடிதத்திற்கு ஆசியப்பிராந்திய சட்ட ஆலோசகர் திரு. BO SCHACK அவர்கள் 26.01.1993 அன்று பதில் கடிதம் அனுப்பியிருந்தார்.

இதற்கு முன்னதாக 16.09.1992ல் டெனிஸ்-தமிழ் தோழமை ஒன்றிய நிர்வாகசபையின் சார்பில் திரு. சி. கந்தசாமி அவர்களும், நானும் நீதியமைச்சு, வெளிநாட்டமைச்சு, வெளிநாட்டவர் இலாகா போன்றவற்றின் அதிகாரிகளை நேரடியாகச் சந்தித்து இலங்கைத் தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்பினால் அவர்களின் உயிர்களுக்குப் பங்கம் விளையுமென்பதை தெளிவாக விளக்கிக் கூறியிருந்தோம்.

இது இவ்வாறிருக்கையில் கடந்த 7.1.1993ல் டெனிஸ்-தமிழ் தோழமை ஒன்றியங்களின் ஒருங்கிணைப்பின் தலைவர் திரு. THORBJØRN LORENTZEN அவர்கள், சோஷலிச மக்கள் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான EBBA STRAGE அவர்களுக்கு தமிழ் அகதிகளின் நிலைமையை விளக்கி ஒருகடிதம் அனுப்பியிருந்தார் என்பது இங்கு குறிப்பிட வேண்டிய விடயமாகும்.

www.tamilarangam.net

இது தவிர டெனிஸ்- தமிழ் தோழமை ஒன்றிய நிர்வாக சபை உறுப்பினரான திரு. TROELS JOHANSEN அவர்கள் கடந்த 10.1.1993 அன்று டென்மார்க்கின் முன்னாள் பிரதமரும், தற்போதைய பாராளுமன்ற உறுப்பினருமான திரு. ANKER JØRGENSEN, முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும் தற்போதைய பிரதமருமான திரு. POUL NYRUP RASMUSSEN மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் திருமதி. DORTE BENNEDSEN ஆகியோருக்கு இலங்கையில் ஒரு சுமுகமான நிலை இல்லையென்றும், தமிழர்கள் அங்கு வாழமுடியாது என்றும், அவர்களை இலங்கைக்குத் திருப்பி அனுப்பவேண்டாம் என்றும் கேட்டு ஒரு கடிதம் அனுப்பியிருந்தார்.

இறுதியாகக் கடந்த வருடம் மட்டும் அகதிஅந்தஸ்துக் கோரி முகாம்களில் எமது தமிழன்பர்களில் 52 பேருக்கு எமது ஒன்றியமானது அவர்களின் வழக்குகளுக்குச் சாதகமான தகவல்கள் கொண்ட அறிக்கைகளை அனுப்பியது. இப்படியாக எமது ஒன்றியங்கள் அகதி அந்தஸ்துக் கோரி முகாம்களில் வசித்து வருகின்ற எமது தமிழ் உடன்பிறப்புக்களுக்கு முடிந்தவரையில் உதவிகள் செய்து வருகின்றோம். எதிர்வரும் காலங்களிலும் எம்மாலான உதவிகள் செய்யக்காத்து இருக்கின்றோம்.

இங்ஙனம்
து. செல்லக்குமார்,
HERNING.

---

கடந்த இரண்டு இதழ்களில் இடம் பெற்ற கடிதங்கள் சார்பாக இந்த வெளியீட்டில் கர்ணன் அவர்கள் கேட்டுக் கொண்ட வகையிலும் நாம் சில கருத்துக்களைச் சொல்ல வேண்டியது இங்கு அவசியமாகின்றது.

1992ல் நடந்து முடிந்த கலந்துரையாடலின் போது எடுக்கப்பட்ட முடிவுகளுக்கமைய சஞ்சீவியில் இடம் பெறும் ஆக்கங்களில் இருக்கும் பிரச்சினைகளைத் தூண்டும் நாகரீகமற்ற சொற்பிரயோகங்களை கூடியவரை தவிர்த்து வருகின்றோம். இருந்தும் நடைமுறையில் தற்சமயம் சில நாகரீகமற்ற சொற்கள் வெளிவரும் ஆக்கங்களில் இடம்பிடித்து விடுகின்றன. இப்படிப்பட்ட சொல் வெளியீட்டிற்காக மனம் வருந்துகின்றோம்.

www.tamilarangam.net

யோகன் அவர்கள் எழுதிய கடிதத்தில் உள்ளீடாக இருந்த "வைத்தியக்காரன்" என்ற சொல்லை நாம் தவிர்த்திருக்காதது எமது தவறேயாகும். மேலும் இப்படிப்பட்ட தவறுகள் இடம்பெறாது கூடியவரை கவனமெடுத்துக் கொள்வோம்.

அத்துடன் ஆக்கதாரர்கள் ஆக்கங்களை எழுதும் போது ஒரு வாசகரையோ அல்லது எதிர்க்கருத்தாளனை நேரடி ஆத்திரப்பட வைக்கும் சொற்பிரயோகத்தினைத் தவிர்த்து தங்கள் கருத்துக்களை மற்றயோரும் புரிந்து கொள்ளும் வகையில் எழுதுவது முக்கியமானதாகும். ஒரு நாகரீகமற்ற சொற்பிரயோகமானது முழுமையான கருத்தினையும் வாசகரிடம் கொண்டு செல்லாது தடுக்கின்றமையால் நல்ல கருத்துக்கள் கூட நிராகரிக்கப்படும் நிலைப்பாடுகள் உருவாக ஏதுவாகின்றது.

மற்றும் கீர்த்தன் அவர்கள் கேட்டுக்கொண்டது போல் "E.P.D.P" என்ற இயக்கத்தினை நாம் புதிதாகக் கண்டுபிடிக்கவில்லை E.P.D.P என்பது "EELAM PEOPLE'S DEMOCRATIC PARTY (ஈழமக்கள் ஜனநாயக் கட்சி.) என்பதாகும். கொழும்பிலுள்ள மற்றைய தமிழ் அமைப்புக்கள் போன்று U.N.P அரசின் கைக்கூலிகளேயாகும்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் இவர்களுக்கென்றும் குறிப்பிட்ட நேரம் கொடுக்கப்பட்டு ஒலிபரப்பப்பட்டுவரும் இவர்களது நிகழ்ச்சிகள், கருத்துக்களானது. இன்று தேக்கநிலையடைந்துள்ள தமிழ் தேசியப் போராட்டத்துக்கு மேலும் கருத்து ரீதியான தாக்கத்தினைக் கொடுத்து பின்னடைவு செய்ய வைக்கும் முயற்சியிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

உதாரணமாக கிளாலி பொதுமக்கள் கொலைகளின் போது EPDP தமது ஒலிபரப்பில் இறந்தவர்கள் யாவரும் புலிகளே என்று தமது வக்கிரப் புத்தியை வெளிப்படுத்தியிருந்தமையும் இங்கு குறிப்பிடத் தக்கது.

-சஞ்சீவி-

# Sammenslutningen af Tamilske-Danske Foreninger
# தமிழ்-டெனிஸ் ஒன்றியங்களின் ஒருங்கிணைப்பு

ADRESSE: FLADBROVEJ 4, 8900 RANDERS. TELEFON: 86 41 71 29

தமிழ்-டெனிஸ் ஒன்றியங்களின் ஒருங்கிணைப்பினால், கடந்த 13.04.93ல் நடாத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச்சீட்டிழுப்பின்போது, பரிசில்கள் பெற்றோர் விபரங்கள்:

1: ------------ (தலைக்காலத்துள் பரிசிலைக்கோரவில்லை.)
2: Shankar Thevasigamy, Tingparken 38, Grindsted
3: Gitte Helbo, Ydertoften 23, Lind, Herning
4: Christia Johansen, Mølleparken 15, Nyborg
5: Lilian Dahl Nielsen, Majsvej 55, Nyborg
6: ------------
7: R. Loganathan, Chr. Koldsvej 1, Skanderborg
8: ------------
9: ------------
10: Kumar, Vestergade 27, Randers
11: ------------
12: ------------
13: Knud Sørensen, Viborgvej 19, Randers
14: R Sritharan, Fonnesbechsgade 15, Herning
15: Mary Stisen, Sandgade 2, Randers
16: I Vijeyakumar, Sprotoften 51, Nyborg
17: ------------
18: ------------
19: ------------
20: Solveig Habekost, Ogstrupgårdsvej 6, Hjortshøj
21: Flemming Tranholm, Randbølvej 30, Vandel
22: ------------
23: R Sritharan, Fyrrevænget 412, Billund
24: R Murvcathas, Tingparken 15, Grindsted
25: Ayse Durmus, Nørrebrogade 114, Randers
26: Sivasuthan Thambiah, Finlandsvej 55, Vejle
27: ------------
28: Carsten Lund, Ranunkelvej 16, Hobro
29: Bo Olesen, Fyrrevænget 8, Farre, Give
30: V Rasalingam, Grønnedal 56, Struer
31: ------------
32: Alice Rothmann, Bakkevej

அன்பான வாசகர்கட்கு,

தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகள் பறிக்கப்படும் போதெல்லாம் எதிர்ப்புக்குரல் கொடுத்துப் போராடவும், உரிமைகளை பாதுகாப்பதற்கும் என ஓர் தீர்க்கமான அமைப்பு எமது மக்களுக்கு என்று இன்றுவரை இல்லாதிருந்த போதும், சஞ்சீவியானது தன்னாலியன்றளவு இதற்காகக் குரல் கொடுத்தும், கருத்துக்கள் தெரிவித்தும் வருவது யாவரும் அறிந்ததே.

கடந்த சில காலங்களாகச் சஞ்சீவி தாமதித்து வெளிவருவதும், ஆண்டுக்கான எண்ணிக்கை விகிதம் குறைந்து வருவதும் நிதி நெருக்கடியின் விளைவே.

தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளின்பால் அக்கறையுள்ளவர்களும், அபிமானிகளுமான உங்களிடமிருந்து சஞ்சீவி தொடர்ந்தும் சிறப்புற வெளிவர, உங்களால் இயன்ற நிதியுதவியை எதிர்பார்க்கின்றது.

நீங்கள் வங்கிமூலம் நிதியனுப்பவேண்டிய கணக்கிலக்கமும், முகவரியும்:

A/C NO: 7601-408876-9

VESTJYSK BANK
7500 HOLSTEBRO

கடித தொடர்புகளுக்கு
CHANCHIVE
DENMARKSGADE 10
7500 HOLSTEBRO -(DENMARK)

ஆசிரியர் குழு.

www.tamilarangam.net

# அழிவிரனம் விலக்கும்

ஜீவன்



www.tamilarangam.net

யார் யாரிடம் கேட்பது விடுதலை?
தாய் சேயிடம் கேட்பதா
தந்தை மகனிடம் கேட்பதா
அண்ணன் தம்பியிடம் கேட்பதா
தம்பி அண்ணனிடம் கேட்பதா
யார் யாரிடம் கேட்பது

இனம் மொழியிடம் கேட்பதா
மொழி இனத்திடம் கேட்பதா
யார் யாரிடம்
கேட்பது விடுதலை

கேட்டதைச் சொல்லவும்
பார்த்ததைக் கேட்கவும்
திறனற்று முடங்கிக் கிடக்கும்
மக்களுக்கோ கிடைப்பது
தண்டமோ தண்டம்
பயன் தண்டம்
யார் யாரிடம் கேட்பது விடுதலை

பாட்டாளி என்றார்கள்
தோழர்கள் என்றார்கள்
செங்கதிரவனின் வருகையை
திசையே செய்தார்கள்
அடிவானம் சிவக்கவுமில்லை
கதிரவன் வரவுமில்லை
இருண்ட ஊரில்
யார் யாரிடம் கேட்பது விடுதலை

அச்சமில்லை, அச்சமில்லை, அச்சமில்லை

அடிவானம் சிவக்கும்
செங்கதிரவனின் வரவறிந்து
திசையே மாறி
செங்கதிரவன் வருவான்
விடிவுக்காய் வருவான்
விடுதலைக்காய் வருவான்

www.tamilarangam.net

# 'பொறுப்பு இல்லாமல் எழுதுவார் புதுமைப்பித்தன்'

# க.நா.சுப்பிரமணியன் உடன் ஒரு பேட்டி

கே: மார்க்சிசம் பற்றி உங்கள் கருத்து?

ப: எனக்கு மார்க்சிசத்தில் நம்பிக்கை கிடையாது. அதுபோலவே வேதாந்தம், பௌத்தம் முதலியவற்றைப் படித்து பார்த்ததில் அதன் மீதும் நம்பிக்கை கிடையாது. ஆனால் மார்க்சிஸ்டுகள் மீது ஒரு அட்மிரேஷன் உண்டு, ஏனெனில் அவர்கள் தான் இலக்கியத்தின் மீது சீரியஸ் பார்வை உடையவர்கள். இலக்கியம் பற்றி தீவிர பிரக்ஞை உண்டு. லெனின் நல்ல படிப்பாளி, அவர் படித்த புத்தகங்களின் பட்டியல் அதைக் காட்டுகிறது. தாந்தே ஷேக்ஸ்பியர் என்று ஏராளம். லெனின் சொல்கிற ஆசிய-ஐரோப்பிய இலக்கியம் பற்றிய கருத்துக்களுடன் எனக்கு உடன்பாடு உண்டு. அவரைப் போல ஆழமாகப் படித்து அபிப்பிராயங்கள் சொன்னால் ஒத்துக் கொள்வேன்.

தாந்தே, ஹோமர் முதலியர்கள் எழுதிய கிரேக்க நாடகங்கள் பற்றி லெனின் அபிப்பிராயங்களை வைத்துப் பார்க்கையில் கட்சியில் உள்ள ஈடுபாடு அளவுக்கு அவருக்கு இலக்கியத் திறனும் இருந்தது. தாந்தேயை கத்தோலிக்க கொள்கையின் கொழுந்து என்று பிற மார்க்சிஸ்டுகள் சொல்வார்கள். அவரும் அப்படியே கத்தோலிக்க தத்துவங்களுக்காக நாவலை அர்ப்பணித்தவர். ஆனால் லெனின் அவற்றை அங்கீகரித்தார். அதேமாதிரி ஹோமர் வீரகாலம் (heroic age) பற்றி எழுதியவர். அதன் வடிவத்தின் மீது லெனினுக்குப் பிரியம்.

மற்றொன்று லெனின் பிரமாதமாகப் படித்தவர் மட்டுமல்ல, அவர் நடையும் நல்ல நடை. கம்யூனிஸ்டுகள் இன்றைய உபயோகத்தை மட்டும் வைத்துப் பார்த்து முற்போக்கு என்று கூறுகிறார்கள். ஆனால் இலக்கியத்தை நீண்ட கால நோக்கில் வைத்துப் பார்க்க வேண்டும். டால்ஸ்டாய் கூடப் பிரச்சாரம் செய்து பார்த்தார். பலன் இல்லை. அவர் பிரச்சாரம் சாதித்ததை விட அவர் இலக்கியம் சாதித்தது அதிகம்.

கே: தற்போதுள்ள சிறந்த தமிழ் எழுத்தாளர்கள்?

ப: சா. கந்தசாமி, நீலபத்மநாபன், நகுலன், வண்ணநிலவன், பூமணி, கி. ரா. நாராயணன், பூமணியின் வெக்கையளவு 'பிறகு' சொல்ல முடியாது. 'பிறகு' வில் சக்கிலிய வாழ்க்கை பற்றி எழுதியுள்ளார். ஆனால் எந்த அளவு சக்கிலிய வாழ்க்கையைக் கிரகித்துள்ளார். என்று தெரியவில்லை. சமீபத்தின் M. G. சுரேஷ் எழுதியுள்ள ''தாஜ்மகாலுக்குள் சில எலும்புக் கூடுகள் நல்ல நாவல். கு. சின்னப்ப பாரதியின் ''தாகம்'' நல்ல விஷயத்தை ஒத்துக் கொண்டு பல இடங்கள் நன்றாயிருந்தும், ஒரே பிரச்சாரம். பா. சிங்காரம்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எழுதிய ''புயலில் ஒரு தோணி'', விட்டல் ராவ் எழுதிய 'நதிமூலம்' சுமாராக வந்துள்ளது. தொ.மு. சி. யின் ''பஞ்சும் பசியும்'' நல்ல நாவல் என்று சொல்லமாட்டேன். ஊர்வலம் போன்ற விஷயங்கள் கார்க்கியிட மிருந்து கொண்டு வருகிறார்.

கே: சிறுகதைகள் பற்றி ...?

ப: அதிகமாக எழுதுகிறார்கள். எல்லாம் படிக்க முடியவில்லை.

விமலாதித்த மாமல்லன் நன்றாக செய்கிறார். திலிப்குமார் போன்றவர்கள் நன்றாக எழுதுகிறார்கள். வண்ணதாசன், வண்ணநிலவன், பிரபஞ்சன் போன்றோர் நன்றாக இருக்கிறார்கள் சுஜாதா கூடச் சில கதைகள் வெற்றிகரமாகச் செய்திருக்கிறார்.

கே: நீங்கள்சொன்னவர்களில் பெரும்பாலோர் Ideological Commitment உள்ளவர்களாக இருப்பது குறித்து?

ப: மனிதனுக்கு ஐடியலாஜிக்கல் கமிட்மெண்ட் இருப்பது தப்பில்லை. தாஸ்தாவெஸ்கி கிருஸ்துவ கமிட்மென்ட் உள்ளவர்தான். ஆனால் அவர் கலையை ரசிக்க முடிந்தது. அது போல டால்ஸ்டாய்க்கும் உண்டு.

கே: மார்க்சிசத்தில் எந்த அம்சத்தில் உங்களால் உடன்பட முடியவில்லை?

ப: ஒரு வகையான மெட்டிரியலிசம். வெறும் ரொட்டிக்கான மனிதனாக மனிதனைப் பார்ப்பது. ஆன்மீக ரீதியான ஒரு மனிதன் இருக்கிறான். மார்க்சியத்தில் தனிமனித சுதந்திரத்தில் நம்பிக்கை கிடையாது. ஜீவா என்னை அராஜகவாதி என்று சொன்னார். நான் அப்படி அழைக்கப் படுவதில் பெருமைப் பட்டேன்.

கே: தனிமனித சுதந்திரத்தை வரையறுக்க முடியுமா?

ப: சமூகத்தில் மனிதன் இருக்கிறான். ஆனால் சமூகக் கட்டுப்பாடுகளை அவன் கட்டாயம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கிடையாது. இலக்கியத்திலும் அப்படியே. அவன் விரும்பினால் சமூகத்திற்கு விரோதமாகவும் போக அவனுக்குள்ள உரிமை—எதைக் குறித்தும் ஒரு அறிவு பூர்வமான விவாதம் செய்யும் உரிமை—வேண்டும்.

கே: தமிழ்க் கவிஞர்கள் பற்றி?

ப: மரபுக்கவிதைகளை யாரும் நன்றாக எழுதவில்லை. புதுக்கவிதைகளில், சண்முக சுப்பையா, நகுலன், ஞானக்கூத்தன், முதலியோர் சமூகப் பொறுப்போடு எழுதுகிறார்கள். பசுவய்யாவின் கவிதைகள் மாதிரி நாவல் இல்லை. அதாவது அவருடைய பழைய கதைகள். இளம் தலைமுறையினரில், ஆனந்த், ஆத்மாநாம், கலாப்ரியா, விக்ரமாதித்யன். விக்ரமாதித்யன் கவிதைகளில் Questioning ஸ்டேட்மென்ட் இருக்கிறது. அது நன்றாக உள்ளது.

கே: சுந்தர ராமசாமியின் ஜே. ஜே. சில குறிப்புகள் வெற்றிகரமான நாவலா?

ப: இல்லை. மூன்று பகுதியாகப் பிரித்துக் கொண்டு எழுதியுள்ளதில் மூன்றும் பகுதி வெற்றிகரமாக அமையவில்லை. தத்துவத்தைப் பொருத்த மட்டில் இரண்டு மூன்று தத்துவங்களைப் போட்டுக் குழம்புகிறார். கம்யூனிஸ்டு-நான்கம்யூனிஸ்ட் என்று தெளிவாக வரவில்லை.

கே: ''இலக்கிய' விமர்சனங்களுக்குத் தத்துவப் பார்வை உண்டா?''

ப: இலக்கியப்பார்வை என்றுதான் சொல்வேன். உருவம், உள்ளடக்கம் என்று இரண்டையும் பார்ப்பது. ஒரு தத்துவமாகச் சொல்வதானால் இலக்கியம் என்பது எல்லாக் கொள்கைகளுக்கும் அப்பாற்பட்டது. எல்லாக் கொள்கையையும் உள்ளடக்கியது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**கே: ஒரு 'மெத்தட்' இல்லாமல் விமர்சனம் செய்தால் தனி மனித விருப்பு, வெறுப்பு அடிப்படையில் விமர்சனங்கள் அமையும் அல்லவா?''**

ப: ஆமாம், இலக்கியத்தைப் பொருத்த அளவில் தனிமனித விருப்பு வெறுப்புகள் மிக அவசியம். இந்த விஷயத்தில் இலக்கியம் வாழ்க்கையைப் போலத்தான். சாப்பாட்டில் விருப்பு வெறுப்புகள் இருப்பது போல. இலக்கியத்திற்கு பொதுவான அளவு கோல்கள் கிடையாது. விருப்பு வெறுப்புகள் உண்டு.

டால்ஸ்டாய், அங்கிள் டாம்ஸ் கேபின் தான் ஷேக்ஸ்பியரின் நாடகங்களைவிட உயர்ந்த புத்தகம் என்று கூறுகிருர். அந்த விஷயத்தை யாரும் ஒத்துக் கொள்வதில்லை. அதே மாதிரி போரும் அமைதியும மட்டம், what is art என்ற புத்தகம்தான் நல்ல புத்தகம் என்று கூறுகிருர். ஒத்துக் கொள்ள முடியாது டால்ஸ்டாய்க்கு அந்த மாதிரி.

கே: ஜெயகாந்தன் பற்றி உங்கள் கருத்து?

ப: ஆரம்பத்தில் நல்ல சிறுகதை எழுதியுள்ளார். எனக்குத் தெரிந்து 20 கதைகள் நாவலில் கொள்கைகள் இருந்த அளவிற்கு வடிவம் இல்லை. அவருக்கு தெரியாத வாழ்க்கை பற்றி தெரிந்த மாதிரி எழுதிவிடுகிருர். சுய அனுபவம் இல்லாமல்.

கே: சுய அனுபவம், சமூக அனுபவம் இரண்டையும் இலக்கியத்தில் பிரயோகிக்கலாம் அல்லவா?

ப: சுய அனுபவத்திற்கு உண்மையின் பலம் அதிகம். சமூக அனுபவத்தில் கம்மி. அனுபவம் சொந்த சாராம்சமாக இருப்பதில்தான் உண்மை வெளிவரும். வாக்கிலே உண்மை வேண்டும் என்ருல் உள்ளத்திலிருந்து, சொந்த அனுபவத்திலிருந்து வரவேண்டும் என்று பொருள்.

கே: அப்படியானுல் தினமணி கதிரில் வெளிவரும் ''கோதை சிரித்தாள்'' கதாநாயகன் ராமானுஜம் ஒரு பௌதிக விஞ்ஞானி. ஆனுல் நீங்கள் பௌதிக விஞ்ஞானி அல்ல. பின் அது எப்படி?

ப: அப்படியல்ல. நான் Dr. சந்திரசேகரிடம் விவாதித்தபோது அவருடைய தனிப்பட்ட ஆசைகளைச் சொன்ஞர். அதைத்தான் மையமாக வைத்து கதாபாத்திரத்தைப் படைத்துள்ளேனே ஒழிய பௌதிக விஞ்ஞானியை அல்ல. பௌதிக விஞ்ஞானிகளின் பௌதீக விஞ்ஞான அனுபவமல்ல. எனது மையம் கதாநாயகனுடையது.

கே: அப்படியானுல் சமூக அனுபவத்தின் மூலம் நீங்கள் பெற்றதைப் போல ஜெயகாந்தனும் செய்யலாம் அல்லவா?

ப: செய்யலாம். அதைச் சரிவரச் செய்யவில்லை என்றுதான் கூறினேன்.

கே: நீங்கள் ஒரு பேட்டியில் திருவள்ளுவருக்குப் பின் வந்த ஒரே மேதை புதுமைப்பித்தன்-பாரதி கூட இல்லை என்று கூறியுள்ளீர்கள். விளக்க முடியுமா?

கே: ஏனெனில் பாரதிக்குக் கூட முன் மாதிரிகள் இருந்தார்கள். முன் மாதிரிகள் இருந்தன. அவர் காவடிச் சிந்து, தெம் மாங்கு போன்றவற்றிலிருந்து கிரகித்தார் ஆனுல் புதுமைப்பித்தனுக்கு அப்படி எதுவும் இல்லை. எனக்குத் தெரிந்த வரையில் பிற மொழிகளிலும் இல்லை. புதுமைப்பித்தனிடம் ஒரு குவாண்டம் லீப் இருந்தது.

கே: புதுமைப்பித்தன் பற்றி உங்கள் விமர்சனம்?

ப: பொறுப்பில்லாமல் எழுதுவார். ஒரு கதையில் நீரில் குப்புற மிதந்த பிணத்தின் முகத்தில் சாந்தி நிலவியது என்று எழுதியுள்ளார். குப்புறக் கிடக்கும் பிணத்தின் முகத்தை எப்படிப் பார்க்க முடியும்? மற்ருெரு கதையில் செத்துப்போன கதாபாத்திரம் மீண்டும் உயிரோடு வரும். சாப விமோசனம், சிற்பியின் நரகம் போன்ற கதைகளில் short of Ambiguity இருக்கிறது. ஆனுல் அதுவே கூட ஆழம் தருவதாக அர்த்தப் படுத்திக் கொள்ளலாம்.

கே: இலக்கியம் என்பது திட்டமிட்டப்படுவதா? தன்னெழுச்சியானதா?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ப: இரண்டும். சிறுகதைகளில் தன்னெழுச்சி அதிகம். நாவல்களில் ஒரு வகையான திட்டமிடலும், அதற்குட்பட்ட தன்னெழுச்சியும் உள்ளன. சிருஷ்டி என்பது ஒற்றைப் பரிமான் நிலை கொண்டது அல்ல. அது பண்முகப் பரிமாணம். ஒரு தனி நபரின் மனநிலை, கற்பனை, சமூக வாழ்க்கை என்று.

கே: முற்போக்கு எழுத்தாளர்கள் பற்றி உங்கள் கருத்து?

ப: முற்போக்கு பிற்போக்கு என்று சொல்வது காலம் சம்மந்தப்பட்டது. இன்றைக்கு முற்போக்காயிருப்பது நாளை பிற்போக்காகிவிடலாம். இலக்கியம் காலத்திற்கு கட்டுப்பட்டதல்ல. டிக்கன்சன் ஆசிரியர்களுக்கு அனுதாபமாக எழுதியதை வைத்து சீர்திருத்தங்கள் கூட மேற்கொண்டார்கள். ஆனால் அதை வைத்து அவர் படைப்புக்களை மதிப்பிட முடியாது. கம்யூனிஸ்டுகள் உபயோக மதிப்பை வைத்து எடை போடுகிறார்கள். நல்ல இலக்கியம் எல்லாம் முற்போக்குதான்.

கே: விமர்சகர் என்ற முறையில் மார்க்சீய விமர்சகர்கள் குறித்து உங்கள் அபிப்பிராயம்?

ப: வானமாமலையின் நாடோடி இலக்கியம் அவரோடு உடன்படாவிட்டாலும் கூடப் படிக்கிறேன். கைலாசபதி படித்தேன். அவர் தமிழ் இலக்கிய அபிப்பிராயங்களைவிட வர்க்கப் போராட்டம் பற்றித்தான் அதிகம் கூறுகிறார். அதே மாதிரி மார்க்சீயத்திலிருந்து சர்வோதயம் போன தளையசிங்கம் படித்தேன். போதாது என்றுதான் சொல்ல வேண்டும். தொ.மு.சி. இலக்கிய விமர்சனம் என்று எழுதியுள்ளார்.

மாக்ஸ் ஃபிரிட்ஜ் என்ற ஜெர்மனிய மார்க்சிய விமர்சகர் பிரமாதமாகச் செய்துள்ளார். கிறிஸ்டோடர் கால்டுவெல் ஆர்த்தடக்ஸ் கிரிட்டிக். சீன புத்தகங்கள் படித்ததில்லை. விமர்சனப் புத்தகங்கள் படித்தது கம்மி,

கே: தமிழில் வரும் இடது சாரி பத்திரிகைகள் குறித்து?

ப: தமிழில் அதிகம் படிக்கவில்லை. தெலுங்கு, உருது, வங்காளி மொழிகளில் செய்த அளவு செய்யவில்லை. இங்கு முற்போக்கு எழுத்தாளர்கள் அமைப்பு இயங்க முடியவில்லை. இதற்கான காரணம் தமிழ் இலக்கியம் இரண்டாயிரம் வருட இலக்கிய மரபு கொண்டது என்று என் அபிப்பிராயம். மேற்சொன்ன மொழிகள் அப்படி அல்ல. ஐந்நூறு அறுநூறு வருடம்தான்.

கே: கார்க்கி இதழ் குறித்து தங்கள் கருத்து?

நல்ல முயற்சி. இலக்கியம் குறித்து நிறைய விஷயங்கள் கூறியிருக்கிறீர்கள். இலக்கியம் குறித்து மார்க்சியர்களுக்கு இருக்கிற ஆர்வம் மற்றவர்களுக்கு இல்லை. அந்த அளவில்! wellcome Marxism.

நன்றி. - கார்க்கி.

---

## சஞ்சீவியின் சிறுகதைப் போட்டி

சஞ்சீவி இதழ் 20ல் போட்டி பற்றி அறியத்தந்த வகையில் **10.07.1995** திகதியுடன் போட்டிக்கான இறுதித் திகதி முடிவடைகின்றது. சிறுகதைப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் எழுத்தாளர்கள் தங்கள் ஆக்கங்களை சஞ்சீவியின் முகவரிக்கு "சிறுகதைப் போட்டி" எனக்குறிப்பிட்டு அனுப்பி வைக்கவும்.

www.tamilarangam.net

# நிச நினைவு

இன்று
என் உறவினன்
தன் வீட்டுக்கு
விருந்துக்காய் அழைக்கப்பட்டேன்.

அவனொருபோது
சின்னவனாயிருந்தான்...

நான்
சந்தியில் நின்று கதையளக்கும்
என்னைப் போன்றவரோடு
நின்றவாறே...
இவனையும் பார்க்கின்றேன்.

வளைந்து வளைந்து
நீண்டு போகும்...
பாதையின் இடை நடுவில்
மேற்கு நோக்கி ஓரொழுங்கை.
பனம் சேரி படையடுக்கி
வேலியொன்று இடைமறிக்கும்.
பூவரசும் கிளிசறியாஸ்
வாதநாராணி சேந்தங்கு
நிழல் பெருக்கும்...

வண்ண வண்ண பூச்சிகளும்
தும்பிகளும் ...
இங்கிருந்து அங்கு போகும்
அதிலிருந்து ...............
...........................

www.tamilarangam.net

இவனும்
இன்னுஞ் சில இளவட்டன்களும்...
தையல் நூலோடும்
அருகம் புல்லோடும்
பூனையாய்ப் பதுங்கி - பெரும்
புருகமாய்ப் பிடிப்பர் தும்பி.

உடல் பிதுங்கத் தடம் போட்டும்
சில தும்பி...
மேலெகும் நூலோடு...
குடலறுந்து தொங்கிச் சிந்த
சொருகப்பட்ட புல்லூக்காம் போது
தலை குத்தி நிலம் நோக்கும்
தும்பியங்கு...

இவையுக்கென்ன
அவை துடிதுடிச்சே
உயிர் துறக்கும்...
கட்டறுந்த பனம் நோரி
படையிழந்தே சரிகின்றது.

அவை துடிக்க
நான் காணேன்.
உயிர்ப் பிரிப்பு
என் மனதுள்ளே...

- லோகநாதன். செ

MARAPU

தொடர்புகளுக்கு

ABIRAME PUBLICATIONS
P.O Box 232,
Wantima South,
Victoria 3152, Australia.

அவுஸ்திரேலியாவிலிருந்து வெளிவரும் சமூக, இலக்கிய சஞ்சிகை

www.tamilarangam.net

# இன்றும் ஏன்?

– சுமதி

மனித சமுதாயம் என்ற ஓர் சமுதாயம் ஆரம்பமான காலத்தில் இருந்த ஓர் சமுதாயம் தான் ஆதிப் பொதுவுடமை சமுதாயமாகும். அச் சமுதாயத்தில் தான் பெண்கள் ஆதிக்கம் பெற்றிருந்தனர். அச்சமுதாயத்தில் வாழ்ந்தவர்கள் தாயாரை மாத்திரம் தான் அறிந்துகொண்டனரே தவிர தந்தையாரை அறிந்தது இல்லை. அக்காலத்தில் [வாழ்ந்தமக்கள்] உணவுக்காக நாடோடியாக அலைய ஆரம்பித்தவர்களுக்கு தலைமை தாங்கியவர்கள் பெண்களேதான். இவ்வாறு அடிமைத்தனமற்ற ஒரு சமுதாயத்தில் சுதந்திரமாக வாழ்ந்த இவர்கள் இன்று மனிதசமுதாயத்திலிருந்து தாழ்ந்த ஒரு நிலைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

இன்று பெண்கள் பல வழிகளில் அடக்கப்படுகின்றனர். அதில் முக்கியமானது அவர்களை விளம்பரப் பொருட்களாகப் பாவிப்பது. அதாவது தற்போது வெளிவரும் விளம்பரப் படங்களில் அவர்களுக்கு கவர்ச்சியான உடைகளை உடுத்தியும் அநாகரிகமான வசனங்களை அவர்கள் மூலம் பேசவைப்பதாலும் படங்களை அதிகவிலைக்கு விற்று தயாரிப்பாளர்கள் அதிகலாபம் பெறுவதுடன் அப்படங்களில் எது எப்படியிருந்தாலும் ஒரு பெண் கடைசியில் ஆணிடம் சரணாகதி அடையவேண்டும் என்பதை வலியுறுத்துகின்றனர். இதனால் பல பெண்கள் உளவியல் ரீதியாக தாம் ஆண்களுக்கு அடிமை என்ற நினைக்கத் தள்ளப்படுகின்றனர். இப்படியான படங்களில் பெண்களைக் கவர்ச்சிப் பொருளாகவே பயன்படுத்துவதும், அத்தோடு தமிழில் வெளிவரும் திரைப்படப் பாடல்களும் பெண்கள் பற்றியதாகவே அதிகம் இருக்கின்றதுடன் அநாகரிகமான இரட்டை அர்த்தமான சொற்பதங்களைப் பாவித்தே எழுதப்படுகின்றன. இதனாலும் நாம்

www.tamilarangam.net

எவ்வளவு பணம் சம்பாதிக்க முடியுமோ அவ்வளவிற்கு சம்பாதிக்கின்றனர். இவற்றைவிட எந்த ஒருபொருட்களுக்காயினும் விளம்பரம் செய்யும் போது அதில் கவர்ச்சியான உடைகளுடன் பெண்களை நிறுத்தியே விளம்பரம் செய்கின்றனர். இப்படியான பல விளம்பரங்கள் எமது பெண்களின் மீதான அடக்குமுறைகளையும், ஆண்களுக்காகத் தான் இவர்கள் பயன்படுத்துகின்றனர் என்பதையும் அறியக்கூடியதாக உள்ளது.

இவற்றைவிட திருமணமாகாது இருக்கும் பெண்களிடம் சீதனம் என்ற பெயராலும் நன்கொடை என்ற பெயராலும் பல்லாயிரக்கணக்கான ஆண்கள் சீதனம் வாங்குகின்றனர். ஒரு சாதாரண குடும்பப்பொருளாதாரம் உள்ள வீட்டில் பல்லாயிரக்கணக்கான பணம் கேட்டால் அக்குடும்பத்தினர் தமது மகளை எவ்வாறாயினும் திருமணம் முடித்துக் கொடுக்கவேண்டும் என்பதற்காக கஷ்டப்படுகின்றார்கள். இதனால் தமது சாதாரண வாழ்க்கையை வாழமுடியாமல் அக்குடும்பமே தத்தளிக்கின்றது. தமது அன்றாட வாழ்க்கையை வாழ்வதற்கே தத்தளித்துக் கொண்டிருக்கும் ஒரு குடும்பத்திடம் அவர்களை மீறிய சீதனம் கேட்டால் அப்பணத்திற்கு யாரிடம் பணம் கேட்பது? அப்படிக் கேட்டாலும் ஒருவரும் அவர்களிடம் மீளப் பணம் பெறமுடியாது என்ற நினைப்பில் கடன் கொடுக்கமாட்டார்கள். இதனால் அக்குடும்பத்தில் உள்ள பெண்கள் திருமணமாகாது தமது வாழ்க்கையை தனிமையில் கழிக்க வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

இதற்குக் காரணம் பெண்களை ஓர் விலைப்பொருளாக ஆண்கள் நினைப்பது தான். ஆண்கள் கேட்கும் அளவில் சீதனம் கொடுத்து திருமணத்தை செய்து கொடுத்தாலும் அப்பெண்களை இவ் ஆண்சமுதாயம் சும்மா விட்டு விடுகின்றனரா...? என்ன நிலையில் அப்பெண்கள் இருந்தாலும் வீட்டு வேலை முழுவதையும் செய்விப்பது மட்டுமன்றி, ஆண்கள் தூங்கிய பிறகு தான் அவர்கள் தூங்கி ஆண்கள் எழும்புவதற்கு முன் எழுந்து அவர்களுக்குத் தேவையான விடயங்கள் அனைத்தையும் செய்யவேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். இதற்கிடையில் பெண்கள் ஆண்களுக்குச் செய்யும் வேலையில் ஏதாவது குறையிருப்பின் அதற்காக அப்பெண்களை சிலர் கடுமையான முறையில் தண்டிப்பதும் உண்டு. திருமணம் ஆண்கள் முடிப்பது தமக்கு எப்போது எல்லாம் உணர்வு ஏற்படுகின்றதோ அதை உடன் தவிர்த்துக்கொள்வதற்கு நிரந்தரமாக ஓர் பெண்தேவை என்பதற்காகவும் தான். தமக்கு பிள்ளைகள் தேவை என்பதற்காகவும் பெண்களை ஓர் பிள்ளைபெறும் இயந்திரமாகவே கருதி திருமணம் செய்கின்றனர். அப்பெண்களுக்கு இதைப்பற்றிய என்ன



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கருத்து என்று எவரும் ஆராய்வது குறைவு. இப்படி தமது உணர்வு தீர்க்கும் ஒரு பொருளாகவும் பெண்களைப் பயன்படுத்துகின்றனர். இவ்வாறு நாள்தோறும் வேலைசெய்யும் ஒருபெண்ணின் கணவனிடம் உமது மனைவி ஏதாவது வேலை பார்க்கின்றாரா என விசாரித்தால், அதற்கு அவர்களின் பதில், "இல்லை, வீட்டில் சும்மாதான் இருக்கின்றா" என்பதாகும். உண்மையில் அதிகவேலை செய்பவர் ஒரு பெண்ணே. ஆனால் ஆண் வர்க்கமோ அவர்கள் எதுவித வேலையும் செய்வதில்லை என தம்பட்டம் அடித்து வைத்துள்ளது. இப்படியே எமது சமுதாயத்தில் இன்னமும் பெண்களை அடக்கி வருகின்றனர் ஆண்கள்.

இவற்றைவிட புலம் பெயர்ந்த நாடுகளிலும் எம்மவர்கள் [இளைஞர்கள்] நாம் அங்கு செய்ததை விட்டுவிடவில்லை. இங்குள்ள இளைஞர்கள் சிலர் திருமணம் செய்வது என்ற போர்வையில் பெண்களை இந் நாடுகளுக்கு அழைத்து அவர்களிடம் இருந்த கொஞ்ச நஞ்ச உரிமைகளைக் கூட பறிக்கின்றனர். ஆனால் அங்கிருந்து வரும் பெண்களுக்கு இது தெரிவதில்லை. தாம் ஒரு சித்திரவதை முகாமிற்கு செல்கின்றோம் என்று அவர்களுக்குத் தெரியாது. இங்கு திருமணம் செய்யும் இளைஞர்கள் அப்பெண்ணின் நிலைபற்றியோ அல்லது அவரது கூற்றுப் பற்றியோ அக்கறை கொள்வதில்லை. அப்பெண்ணிடம் அழகு இருக்கின்றதா என்று தான் பார்ப்பார்கள். இப்படி அழகுக்காக திருமணம் செய்பவர்கள் தாம் எதிர்பார்த்த அழகு குறைய தமக்கு ஏற்பட்ட ஏமாற்றத்திற்காக அப்பெண்களைத் துன்புறுத்துகின்றனர். இப்படியான நிலை இங்கு உள்ளதால் இங்கு வாழும் அநேகமான பெண்களின் மனநிலை பாதிக்கப்பட்டுள்ளது. இதைவிட இங்கு திருமணம் செய்கின்றவர்கள் தமது வயதைப்பற்றிக் கவனியாது, பெண்களின் வயதைப் பற்றிக் கவனிப்பதுதான் அதிகம். அதாவது தமக்கு அதிகவயதாக இருந்தாலும் பெண்ணிற்கு மிக குறைவான வயதாகவே இருக்கவேண்டும் என்று நினைப்பார்கள். இவ்வாறு எதிர்பார்த்து திருமணம் முடிக்கும் இவர்கள் திருமணம் முடித்த சில நாட்களின் பின்பு தமது வயதைக் கருத்திற்கொண்டு தமக்கு வந்த மனைவி மீது வீணான சந்தேகப் பார்வையை வீசிவிடுவார்கள். தாம் நல்லதோர் வாழ்க்கையை அமைக்கப் போவதாக எண்ணிவந்தவர்கள் தமக்கு அமைந்த வாழ்க்கையை நினைத்து தமக்குள்ளேயே கண்ணீர் விட்டபடி உள்ளனர். இதைவிட தமது மனைவி வேறொருவருடன் அதிகம் பழகினால் அதைச் சந்தேகக் கண்ணுடன் பார்க்கின்றனர். அத்துடன் விடாது துன்புறுத்தவும் செய்கின்றனர். ஆனால் ஆண்கள் தாம் எதுவும் எவருடனும் கதைக்கலாம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்று நாம் எல்லோருடனும் கதைப்பார்கள். இதை அவர்களின் மனைவி கேட்டால் உடனே அதற்கும் துன்புறுத்துவார்கள். நாம் எதையும் செய்யலாம் ஆனால் பெண்கள் எதையும் தமக்குத் தெரியாது செய்யக்கூடாது என்ற கீழ்த் தர எண்ணத்தில் இன்று வாழ்ந்து வருகின்றனர். எனவே இங்குள்ள சில பெண்களுக்கு பேச்சுச் சுதந்திரம் கூட பறிக்கப்பட்டுள்ளது.

இவற்றைவிட ஆண்கள் சிலர் மதுவருந்திவிட்டு வீடுவந்து தமது வீரம் என பெண்களைத் தாக்குகின்றனர். அப்படித் தாக்கப்படும் அப்பெண் ஏன் தாமும் உடன் எதிர்த்து வாதாடலாம் தானே? அதைவிடுத்து எமது சம்பிரதாயத்தில் கணவனை எதிர்க்கக் கூடாது எனக் கூறி பெண்களை முடக்கிவைத்திருப்பது அவர்களுக்குப் புரியவில்லையா...? ஆதிகாலத்தில் பெண்களே எல்லாவிதமான வேலைகளையும் செய்துவந்தனர் என அறிந் தும், இன்றைய சமுதாயத்தில் பெண்களால் சிலவேலைகள் செய்யமுடியாது என்று நமக்குத் தாமே தாழ்வு மனப்பான்மையை உருவாக்கியுள்ளனர். இப் படிப்பட்ட தாழ்வு மனப்பான்மைகளால் தான் பெண்சமுதாயமே அடிமையாக்கப் பட்டுள்ளது. இவற்றையெல்லாம் களைந்து சிந்திக்கத் தொடங்க வேண்டும்.


இப்படி அடிமைகளாக்கி வைத்திருக்கும் ஆண் ஆதிக்கத்தை எதிர்த்துப்போராட ஒரு சில பெண்களைத் தவிர எத்தனை பெண்கள் இதுவரை யில் புறப்பட்டுள்ளனர்? ஒரு சிலரைத்தவிர மற்றையவர்கள் இதற்கு ஒரு முடிவு தேவையில்லையென நினைக்கின்றனரா..? சரி, எமது மண்ணில் தான் அநேகமான பெண்கள் பொருளாதாரம், சம்பிரதாயப் பிரச்சினைகளென பல போலிவாழ்வை வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். ஆனால் புலம்பெயர்ந்த நாடுகளில் ஓர் ஆணின் உதவிதான் பெண்ணிற்கு தேவையென்றில்லை. எமது நாட்டில் பெண்கள் ஆண்கள் மீது அநே கமாக பொருளாதாரத்தில் தங்கியிருக்கவேண்டும் என்ற நிலை. ஆனால் இங்கு அப்படித் தங்கியிருக்கத் தேவையில்லை. காரணம் இந்நாடுக ளில் அகதிகளுக்கென உதவி வழங்கும்போது அது ஆணிற்கும் பெண் ணிற்கும் சமமாகவே வழங்கப்படுகின்றது. இப்படி வழங்கப்பட்ட போதி லும் இங்கு எமது சம்பிரதாயம் என அடிமைவாழ்க்கையே வாழ்கின்ற னர். இவற்றை ஏன் புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் பெண்களால் எதிர்க்கமுடியவில்லை...?

ஆண்கள் தமது வாழ்க்கையில் பெண்கள் அவ்வளவு அவ சியம் என நினைக்கின்றனர். ஆனால் அப்பெண்களுக்கு உள்ள

(தொடர்ச்சி பக்: 45)

www.tamilarangam.net

# குறுக்கெழுத்துப்போட்டி



இல : 20

குறுக்கெழுத்துப் போட்டி சார்பாக கருத்துக்கள் கிடைக்கப் பெற்றுள்ளோம். கருத்துக்கள் தெரிவித்தோருக்கு நன்றிகள். சுட்டிக் காட்டப் பட்ட தவறுகள் இனியும் வராதவண்ணம் எழுத முயற்சிக்கின்றோம்.

குறுக்கெழுத்துப் போட்டிக்கான பரிசுகளாக கவிதைத் தொகுப்பு, சிறுவர் நூல்கள், ஏ சஞ்சிகை என்ற வகையில் அனுப்பி வைக்கப்படும். சஞ்சீவி உங்கள் கைகளுக்கு காலக் கிரமத்தில் கிடைத்ததும், 15 நாட்களுக்குள் கு.எ. போட்டியின் பூர்த்தி செய்த தாளினை எமக்கு அனுப்பிவையுங்கள்.

கேள்விகள்: (இட - வல)

1.4: இந்த வெறியினால், இனங்களிடையே தாக்குதல் நடைபெறுகின்றது.
8.6: கைகலப்பு, சண்டை என்பதனை இப்படியும் சொல்வர்.
13/11: எங்கு சென்றபோதும் நாம் கால் பதித்த "இந்த" தடயமானது - மறைந்தும் இருக்கும்.
15.16: மூன்று புறம் கடலால் சூழப்பட்ட பகுதியை இப்படி அழைப்பர்.
17.21: வருமானம், அதிகாரம், உரிமை, தொழில் முதலியவற்றின் அடிப்படையில், மக்களை வகுக்கப்பட்ட குறியீடே இது.
27.25: தொண்டையில் உள்ள நாளை அதிர்வால் ஏற்படும் ஒலி.

29.30: எமது நாட்டில் பண்டைக்கால வீடமைப்பு முறையில் உயர்ந்து கூடிய வெளிகொண்டதாக அமைக்கப்படும் மண்டபம் போன்ற அமைப்பினை இப்படிக் கூறுவர்.
36.40: இது ஆடவர் காதணியாகும்.
42.44: வேலைக் களைப்புடையோருக்கு இது ஏற்படும்.
46.48: பலர் மத்தியில் ஒருவருக்கு ஏற்படும் பெருமகிழ்ச்சியில் இது இருக்கும்.
51.55: இதனை விவாதம் அல்லது வாக்குவாதம் என்றும் சொல்லலாம்.
57.59: இது சம்மதத்துக்கு அறிகுறியல்ல.
61.63: இது உவமையைக் குறிக்கும் இடைச்சொல்லாகும்.

கேள்விகள் : (மேல் - கீழ்)

1.25: தன் உபயோகத்திற்காக, பிறர் பொருளை பெற்றுத்திருப்பிக் கொடுப்பதனை இப்படிக் கூறுவர்.
3.27: புலாவின் மணத்தினை இப்படியும் சொல்வர்.
7.23: ஒருவருடைய முன் அனுபவம் அல்லது அறிவு இதுவாகும்.
8.16: பிரம்பினால் பின்னப்பட்ட நீர்வளைக இருக்கையின் பெயர்.
13.37: பாரம் தலையில் அழுத்தாமல் இருக்க இது பயன்படும்.
30.62: +, −, ÷ போலல்லாது "×" குறியீடப்பட்ட கணக்கினை தீர்க்கும் போது இது நடைபெறும். குழம்பியுள்ளது.
32.48: இலகுவான, மிருதுவான தன்மை கொண்டதனை இப்படியும் கூறலாம்.
36.52: பயிர்களின் மேற்பகுதியில் வரும் தானிய மணிகளையும், சூரிய ஒளியின் கீற்றினையும் இப்படி அழைப்பர்.
39.63: எமது நாட்டில் இந்த சாற்றிலிருந்தே கூடிய அளவிலான சீனி உற்பத்தி செய்யப்படுகின்றது.
42.18: இறந்த ஒருவரின் நினைவின் போது மரியாதையுடன் அவரை இப்படி அழைப்பர்.
43.59: இலங்கை ஒரு ரூபாவின், நூறில் ஒருபங்கு இதுவாகும்.
57.49: இது புதிதானவற்றுக்கு தேவை, சந்தர்ப்பம் காரணமாக ஏற்படுகின்ற மதிப்பு அல்லது வரவேற்பினால் இது ஏற்படும்.

www.tamilarangam.net

குறுக்கெழுத்துப் போட்டி இல: 19 ன் சரியான விடைகளும் பரிசு பெறுவோர் விபரங்களும்:

**இடம் - வலம்:**

1.4: பஞ்சம்
8.6: கதர்
11.13: மாயம்
16.15: மரை
19.22: திணிப்பு
28.30: அனாதை
33.35: கலம்
38.40: குரல்
41.44: பட்டினி
57.62: மூளைச்சலவை

**மேல் - கீழ்:**

1.9: பலி
3.19: சமாதி
7.15: தரை
8.40: கமக்காரன்
22.46: புதைகுழி
28.4: அணியம்
34.58: கட்டளை
55.39: அயல்
57.25: மூலபலம்
60.44: சகுனி.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 ப | 2 ஞ் | 3 ச | 4 ம் | ■ | 6 ர் | 7 த | 8 க |
| 9 லி | ■ | 11 மா | 12 ய | 13 ம் | ■ | 15 ரை | 16 ம |
| ■ | ■ | 19 தி | 20 ணி | 21 ப் | 22 பு | ■ | 24 க் |
| 25 ம் | ■ | ■ | 28 அ | 29 னா | 30 தை | ■ | 32 கா |
| 33 ல | 34 க | 35 ம் | ■ | ■ | 38 கு | 39 ல் | 40 ர |
| 41 ப | 42 ட் | 43 டி | 44 னி | ■ | 46 ழி | 47 ய | 48 ன் |
| 49 ல | 50 ட | ■ | 52 கு | ■ | ■ | 55 அ | ■ |
| 57 மூ | 58 ளை | 59 ச் | 60 ச | 61 ல | 62 வை | ■ | ■ |

1. PATHMANATHAN. K.
JØRGENS ALLE 6.1
8850 BJERRINGBRO.

2. E. SINTHUJA
HØRHAVEN 18.3 TH
9000 AALBORG.

3. S. ARAVENTH
MOLDE VEJ 57. ST.TH
7100 VEJLE.

குறுக்கெழுத்துப் போட்டிக்கான பரிசில்களாக கவிதைத் தொகுப்பு, சிறுவர் நூல்கள், பிற சஞ்சிகைகள் என்ற வகையில் சஞ்சீவியால் அனுப்பிவைக்கப்படும்.

www.tamilarangam.net

அண்மையில் நடந்து முடிந்த மாகாணசபைத் தேர்தலின் போது எப்போதும் போலில்லாது கூடிய தமிழ் வேட்பாளர்கள் முண்டியடித்துக் கொண்டு போட்டியிட்டிருந்தனர். இந்தத் தமிழர்கள் தமிழ் மக்களின் பிரச்சனைகளை பாராளுமன்றத்தில் எடுத்துக் கூறி, ஒரு தீர்வினைக் கொண்டுவருவார்கள் என்ற நம்பிக்கை — இன்றுவரை குறைந்தபட்ச தமிழ் மக்கள் மத்தியில் இருப்பது கவலைக்குரிய விடயமே.

காங்கிரஸ், தமிழரசு, த. வி. கூட்டணி அதன் பின் தனித் தனித் தலைவர்களாகவும் பின்பு EROS, TELO, EPRLF, ENDLF இவர்கள் யாவரும் தமிழர்கள் சார்பாகவே இந்த பாராளுமன்றம் சென்றும், முடியாத தமிழர் பிரச்சனைகளை UNP யின் பெயராலும், லலித் கட்சியின் பெயராலும் பாராளுமன்றம் சென்று, இனங்களுக்கிடையிலான முரண்பாடுகளைத் தீர்ப்பார்களென நினைத்துக் கொண்டிருக்கும் பல தமிழர்களுக்கு, இலங்கைப் பாராளுமன்றத்தில் தமிழர்கள் தொடர்பான நிலைப்பாடுகள் புரியாமல் உள்ளதே காரணம்.

---

(41ம் பக்கத் தொடர்ச்சி)

ஆசாபாசங்களை ஏன் இந்த ஆண்சமுதாயம் புரிந்துகொள்ளவில்லை ---? இதைப் புரியவைக்கும் வகையில் எமது பெண்சமுதாயம் எப்போது ஏதாவது செய்யப்புறப்படுகின்றதோ அன்றுதான் அவர்களுக்கான விடிவுகாலம் ஆரம்பமாகும். எமது சமுதாயத்தில் அரைவாசிக்கும் மேலானோர் பெண்களே. அவர்கள் அடிமைகளாக அவர்களது சுதந்திரம் பறிக்கப்பட்ட நிலையில் இருக்கும்போது எமது ஒட்டுமொத்தமான சமுதாயத்திற்கும் எப்படி சுதந்திரம் கிடைப்பது? எனவே அரைவாசிக்கும் மேலாகவுள்ள பெண்கள் முதலில் விடிவை நோக்கிப் புறப்பட்டால் தான் ஒட்டுமொத்தமான சமுதாயத்தின் விடிவைப்பற்றிச் சிந்திக்க முடியும். இன்று பெண்களை அடக்கி அவர்களது சுதந்திரத்தைப் பறித்துவரும் அனைத்து சக்திகளுக்கு எதிராகவும் பெண்கள் தமது குரலை உயர்த்துவதே முதலில் அவசியமானதொன்றாகும்.

www.tamilarangam.net

# கவிஞர் மு. மேத்தாவும் அவரது கவிதைகளும்

செல்வன்

தமிழ் கவிதா உலகினில் பாரிய பாதிப்பினை ஏற்படுத்திய கவிஞர் மு. மேத்தா அவர்கள் தனக்கென்றொரு தனித்துவமான பாணியில் புதுக்கவிதைகள் வரைந்து வருகிறார். ஆனந்தவிகடனில் பிரசுரமாகிய "தேசபிதாவுக்கு ஒரு தெருப்பாடகனின் அஞ்சலி" என்ற தலைப்பிலான கவிதையே முதன் முதலில் இவரை இலக்கிய உலகம் இனம் காண வகை செய்தது எனலாம். இக்கவிதை அடிகள் தேசியத்தை நேசிப்பவர்களின் உள்ளங்களை மனிதாபிமானரீதியாக உலுக்குவதாக அமைந்திருந்தது. இக்கவிதையில் மு. மேத்தா அவர்கள் ஒரு இடத்தில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

நீ நகரங்களை காட்டிலும்
சேரிகளையே
அதிகம் நேசிப்பாய் என்பதனால்
எம் அரசியல் ஞானிகள்
நகரங்களையே சேரிகளாக்கிக் கொண்டிருக்கிறார்கள்....

கவிஞர் மு. மேத்தாவின் ஆரம்ப கவிதைத் தொகுப்புக்களான "ஊர்வலம்", "கண்ணீர்ப்பூக்கள்" ஆகிய நூல்கள் வெளிவந்த போது புதுக்கவிதைக் கொடி உயர்ந்து பறக்க ஆரம்பித்தது. பல்கலைக்கழகங்கள், உயர்நிலைக்கல்லூரிகளில் மேத்தாவின் விசிறி என்று கூறுவதே நாகரீகம் ஆக அப்போது கருதப்பட்டது. அப்போது மாணவர்கள் Autograph ல் கையெழுத்திடும் போது மேத்தாவின் வாசகங்களை பயன்படுத்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெரும்பாலும் தவறமாட்டார்கள்.

மறுபுறம் மரபுக்கவிதை ஆதரவாளர்கள் மு. மேத்தாவையும் அவரது கவிதைகளையும் பலமாக விமர்சனம் செய்ய ஆரம்பித்தார்கள். ஒருவர் செய்த விமர்சனத்தில் "மேத்தா இன்னும் கவிதை எழுத ஆரம்பிக்கவில்லை" என்றும் "என்றாவது ஒருநாள் மேத்தா கவிதை எழுதினாலும் எழுதலாம்" என்றும் "எவ்வாறு எனில் இந்தியப் பிரஜை ஒருவர் என்றாவது ஒருநாள் ஜனாதிபதி ஆகக் கூடிய வாய்ப்பு இருப்பதைப் போல" என்றும் குறிப்பிட்டிருந்தார். எவ்வாறு ஆயினும் மேத்தா தனது கவிதைகளினால் ஆயிரம் ஆயிரம் இதயங்களை வசியப்படுத்தி இருந்தார். மேத்தாவை விமர்சிப்பவர்களோ மேத்தா தன் பாணியில் ஒரு கூட்டத்தை உருவாக்கி வருகிறார் என்று தமது விமர்சனங்களில் ஒப்புக்கொண்டுள்ளனர். மேத்தாவின் பாணியில் வளர்ந்த கவிஞர்களில் மேத்தாதாசன் குறிப்பிடத்தக்கவர். மேத்தாதாசன் மேத்தா பற்றி எழுதிய ஒருகவிதையில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

காற்றையும்
கவிதையாக செதுக்கும் தேவதச்சனே
நீ உந்தன்
இரகசியங்களை அச்சடிக்கிறாய்
நாங்கள்
உயிர் எழுத்துக்களை உச்சரிக்கிறோம்.

நாங்கள்
உந்தன் கவிதையில்
கிளிர் காய அல்ல,
தீக்குளிக்கவே
தீர்மானம் செய்திருக்கிறோம்.

மேத்தாவின் சிறப்பியல்பு சிக்கலான விடயங்களையும் எளிய வார்த்தைகள் மூலம் அழகாக வடிவமைப்பதே ஆகும். மேத்தா பொதுவாக எல்லா விடயங்கள் தொடர்பாகவும் கவிதைகள் வரைந்து இருக்கிறார். ஆனால் அவரது காதல் கவிதைகள் புதுமையானவை. இளைய மனங்களை இனிமையால் நிறைக்க வல்லவை. வாசகர்கள் ஒரு காதலியின் சிணுங்கலைச் செவி மடுக்கும் ஒரு சுக அனுபவத்தை இக் கவிதைகளில் உணரக்கூடியதாக


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கம்யூனிசத்திற்குச் சாவுமணி அடிக்கப்பட்டுவிட்டதா?

தங்கருபன்

"கலாச்சாரம் இல்லாமல் சோசலிச சமுதாயம் உயிர்வாழ முடியாது, சோசலிச சமுதாயத்திற்கு கலாச்சாரமே உயிர்நாடி" என்று செக் நாட்டு புரட்சிக் கலைஞர் ஜீலியஸ் பூசிக் கூறினார். கலாச்சாரப் புரட்சியின் அவசியத்தை உண்மையான மார்க்சிய-லெனினிய வாதிகள் வற்புறுத்தி வந்திருக்கின்றனர். ஆனால் ரஷ்ய குருசேவ்-பிரஸ்னேவ் கும்பல் மற்றும் மேற்கத்திய ஏகாதிபத்திய-வாதிகள், ட்ரொஸ்கிய வாதிகள், சீனக் கலாச்சாரப் புரட்சியை இழிவு படுத்தினர். இன்றைய சீனத் திரிபுவாதிகளும் கலாச்சாரப்புரட்சியை வன்முறையானது, நாசம் விளைவித்தது, என்று கூறிவருகின்றனர்.

முதலாளித்துவ வாதிகள், கட்சிக்கலைப்புவாதிகளுக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட மாபெரும் மக்கள் இயக்கம் தான் கலாச்சாரப் புரட்சி. வர்க்க-எதிரிகள் (பாட்டாளி வர்க்கத்தின் எதிரிகள்) ஈவிரக்கமற்ற முறையில் அம்பலப்படுத்தப்பட்டனர். ரஷ்யாவில் குருசேவ்-பிரஸ்னேவ் கும்பலின் ஆட்சிக் கவிழ்ப்பில் படிப்பினை பெற்ற சீனக் கம்யூனிஸ்ட் கட்சி, எதிரிகள் கட்சிக்குள் ஒளிந்திருப்பதை உணர்ந்து அவர்களுக்கு எதிரான போராட்டங்களையும் ஆரம்பித்தது. கையாலேயான முதலாளித்துவப் பாதையாளர்கள் கட்சி, மற்றும் அரசிலிருந்து தூக்கி எறியவும், அம்பலப்படுத்தவும் கலாச்சாரப்புரட்சி பயன்படுத்தப்பட்டது.

உலகெங்கும் சீனக் கலாச்சாரப் புரட்சியைப் பற்றி முதலாளித்துவ, ஏகாதிபத்திய வாதிகள் அவதூறுகளைப் பரப்பினர். "அங்கு (சீனாவில்) கம்யூனிசப் பயங்கரவாதிகள் மக்களைக் கொன்று குவிக்கின்றனர். கம்யூனிஸ்ட்கள் ஜனநாயகம் என்றால் என்ன என்று தெரியாத பிசாசுகள்." என்று பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் இவர்களின் எதிர் பிரச்சாரங்களை முறியடிக்கும் கலாச்சாரப் புரட்சி குறித்து எட்டாவது மத்திய கமிட்டித் தீர்மானம் கூறுகிறது.

"மகத்தான பாட்டாளிவர்க்கக் கலாச்சாரப் புரட்சியில் ஒரே வழிமுறை பரந்துபட்ட மக்கள் திரளினர் தம்மைத் தாமே விடுவித்துக் கொள்வ-

www.tamilarangam.net

தாகும்; அவர்களுக்காகச் செய்யப்படும் வேறு எந்த வடிவ முறையும் பயன்படுத்தக் கூடாது. 'மக்களை நம்புங்கள், அவர்களைச் சார்ந்து நில்லுங்கள், அவர்களது முன்முயற்சியை மதியுங்கள், பயத்தை விட்டொழியுங்கள், ஒழுங்குமுறை சீர்கேடடைவதைப் பற்றி அஞ்சாதீர்கள்; புரட்சி அவ்வளவு மென்மையானதாக, நாகரிகமானதாக, விரும்பத்தக்கதாக, இனிமையானதாக, கருணைமிக்கதாக, கட்டுப்பாடுமிக்கதாக, பெருந்தன்மை வாய்ந்ததாக இருக்காது என்று தலைவர் மாவோ நமக்கு அடிக்கடி சொல்லியிருக்கின்றார். இந்த மாபெரும் புரட்சிகர இயக்கத்தில் பரந்துபட்ட மக்கள் தாமாகவே போதனை பெறவிடுங்கள்; விசயங்களை சரியான முறையில் மற்றும் தவறான முறையில் செய்வதற்கிடையில் திருத்தமான முறையில் மற்றும் பிழையான முறையில் செய்வதற்கும் இடையில் வேறுபடுத்துவதை கற்பதற்கும் விடுங்கள்.

பரந்துபட்ட மக்கள் திரளினர் சரியான கண்ணோட்டங்களில் தெளிவுபடவும், தவறான கண்ணோட்டங்களை விமர்சிக்கவும், சாத்தான்களையும், வேதாளங்களையும் அம்பலப்படுத்தவும் முடியும் வகையில் பெரும் அச்சுவரொட்டிகளையும், விஷயங்களை விவாதித்துத் தீர்க்கும் மாபெரும் வாதப் பிரதிவாதங்களையும் முழுமையாகப் பயன்படுத்துங்கள். இந்தவழிமுறையில் பரந்துபட்ட முறையில் பரந்துபட்ட மக்கள் திரளினர் போராட்டத்தின் வளர்ச்சிப் போக்கில் தங்களது அரசியல் உணர்வை உயர்த்திக் கொள்ள முடியும்; தங்களது திறமையையும், ஆற்றலையும் செழுமைப் படுத்திக் கொள்ள முடியும்; சரிக்கும் தவறுக்கும் இடையில் வேறுபடுத்த முடியும், எதிரிக்கும் நமக்கும் இடையில் ஒரு தெளிவான கோடு வரைய முடியும்"

ஆனால் இன்றைய சீன ஆட்சியாளர்கள் (டெங் கும்பல்) கலாச்சாரப் புரட்சியை கீழ் கண்டவாறு வர்ணித்தனர்.

"ஒரே பதில்; கட்சியினுள் அரசியல் வாழ்வு இவ்வாண்டுகளில் அசாதாரணமானதாக இருந்தது; கட்சியினுள் ஜனநாயகமில்லாதிருந்தது. இவை சமூகம் முழுவதும் ஜனநாயகமில்லாத ஒரு நிலைக்கு வழிவிட்டன. இது நமது அனைத்து மக்களும் அவதிப்பட்ட ஒரு கொடூரமான பெரும் பேரழிவாகும்"

உண்மையோ சீன திரிபுவாதிகளை (டெங் கும்பல்) அம்பலப்படுத்துவதாகவே அமைந்துள்ளது. சீன கம்யூனிஸ்ட் கட்சியின் 8வது மத்திய கமிட்டி அறிக்கை கூறுகிறது.

"இரண்டு வெவ்வேறு வகையான முரண்பாடுகளிடையே ஒரு

www.tamilarangam.net

கூறான வேறுபாடு கொள்ள வேண்டும்; அதாவது எதிரிக்கும், நமக்கும் இடையிலானது; மக்கள் மத்தியிலானது ஆகிய முரண்பாடுகள். எதிரிக்கும் நமக்கும் இடையிலான முரண்பாட்டை மக்கள் மத்தியிலான முரண்பாடாக மாற்றக் கூடாது. மக்கள் மத்தியிலான முரண்பாட்டை எதிரிக்கும் நமக்கும் இடையிலான முரண்பாடாக மாற்றக்கூடாது.

பரந்துபட்ட மக்கள் வெவ்வேறு பார்வைகளைக் கொண்டிருப்பது சாதாரணமாக இருக்கும். வெவ்வேறு பார்வைகளுக்கு இடையிலான மோதல் தவிர்க்க முடியாதது, அவசியமானது, நன்மையுடையது; இயல்பான, முழுமையான விவாதத்தின் போக்கில் பரந்துபட்ட மக்கள் எது சரியானது, நேரானது, எது தவறானது என்பதை உறுதி செய்து ஒரு மனதானதை சிறிது சிறிதாக அடைவர்.

விவாதத்தில் பயன்படுத்தப்பட வேண்டிய முறை உண்மையை வைப்பது, காரண காரியங்களைப் பரிசீலிப்பது, காரண, காரியங்கள் மூலம் ஏற்க வைப்பது. வேறுபட்ட பார்வைகளைக் கொண்டுள்ள ஒரு சிறுபான்மையினரைப் பணியும்படி நிர்ப்பந்திக்கும் எந்த முறையும் அனுமதிக்க முடியாது. சிறுபான்மையோர் பாதுகாக்கப்பட வேண்டும், ஏனெனில் உண்மை சில சமயம் சிறுபான்மையினரோடு இருக்கிறது. சிறுபான்மை தவறாக இருப்பினும் கூட அவர்களது நிலைப்பாடுகளை விவாதிக்கவும், அவர்களது பார்வைகளைத் தக்கவைத்துக் கொள்ளவும் அனுமதிக்கப்பட வேண்டும்.

ஒரு விவாதத்தின் போது, நிர்ப்பந்தம், அல்லது பலவந்தத்தின் மூலமாக அன்றி அது காரண காரியங்களை அலசுவதன் மூலம் நடத்தப்பட வேண்டும்."

மேற்கூறிய தீர்மானம் இன்றைய சீன நவீன திரிபுவாதிகளை தோலுரித்துள்ளது. மாபெரும் கலாச்சாரப் புரட்சியை இழிவுபடுத்தி "நவீனமயம்", "சிறப்பு பொருளாதார மண்டலம்", போன்ற பெயரில் முதலாளித்துவத்திற்கு ஆதரவளித்து "கம்யூனசத்தை பாதுகாக்கிறோம்" என பீற்றுகின்றனர் இன்றைய சீன ஆட்சியாளர்கள். இவர்களின் ஊதுகுழல்களாக இருக்கும் ஒர் கும்பல் (மூளையால் விறிந்த அறிவாளிகள்) சீனாவில் இன்றும் "சோசலிசம் பூத்துக் குலுங்குகிறது" என்கிறார்கள்.

கலாச்சாரப் புரட்சிக்காலத்தில் எவை, எல்லாம் தடை செய்யப்பட்டனவோ அவையெல்லாம் இன்றைய ஆட்சி-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யாளர்களால் புரணமைக்கப்பட்டுள்ளன. ஊழல், விபச்சாரம், பெண்விற்பனை, பெண் அடிமைத்தனம் போன்றவை கலாச்சாரப் புரட்சிக் காலத்தில் கடுந்தண்டனைக்குரிய குற்றங்களாகும். இன்று இவை சர்வசாதாரண நிகழ்ச்சிகள். இவை பற்றி நாம் சாதாரண பத்திரிகைகளில் கூட பார்க்கலாம். ஆனால் இன்றைய சீன ஆதரவு அறிவாளிகளுக்கு இவை எல்லாம் சோசலிச முன்னேற்றங்கள். இவர்களுக்கு **மானம், வெட்கம், ரோசம்** என்பதே கிடையாது. இவர்களது உடலில் இரத்தம் ஓடவில்லை. பதிலாக சாக்கடை தான் ஓடுகிறது போலும்.

மாபெரும் தலைவர் மாவோவின் மரணத்தைத் (1976) தொடர்ந்து சீன ஆட்சியையும், கட்சியையும் டெங்கும்பல் கைப்பற்றி முதலாளித்துவத்தை அரங்கேற்றியது. ரஷ்ய அனுபவங்களிலிருந்து பாடங்கற்று தொடர்ந்து பாட்டாளிவர்க்கப்புரட்சியைத் தொடர்ந்த சீனத்திலும் வேறு ஒரு வகையில் முதலாளித்துவம் அரங்கேற்றப்பட்டு விட்டது. கலாச்சாரப்புரட்சிக்குத் தலைமை தாங்கியவர்கள், கலாச்சார புரட்சி ஆதரவாளர்கள் சகலரும் கட்சியிலிருந்து விலக்கப்பட்டனர். முதலாளித்துவம் அரங்கேறியதால் மாவோ காலத்தில் எல்லா மக்களுக்கும் கிடைத்த கல்வி, மருத்துவம் போன்ற அடிப்படை வசதிகள் அற்றுப் போனது. மாவோ காலத்தில் இவை எல்லோருக்கும்கிடைத்தன என்பதை முதலாளித்துவப் பத்திரிகைகளே தவிர்க்க முடியாமல் ஒப்புக் கொண்டன. மாவோ காலத்தில் எந்த ஏகாதிபத்தியங்களுக்கு எதிராக சீன அரசு இருந்ததோ அவர்களுடன் இன்றைய டெங்கும்பல் உறவை வைத்துள்ளனர். 1989 மாணவர் படுகொலைகள் இவர்களது அதிகாரவர்க்க முதலாளித்துவத்திற்கு எடுத்துக்காட்டு. மாணவர்கள் அமெரிக்க சுதந்திரச் சிலையை உயர்த்திப் பிடித்ததை காரணம் காட்டி இது கம்யூனிசத்திற்கு எதிரான மேற்கத்தைய நாடுகளின் சதி என்றும், அவ்வெழுச்சியில் பங்கு கொண்டவர்களைக் கலாச்சாரப்புரட்சியின் ஆதரவாளர்கள் என்றும் கூறினர். அவ்வெழுச்சியில் மாவோவின் படங்களும், கலாச்சாரப்புரட்சிக் காலத்தில் பாடப்பட்ட கீதங்கள் பாடப்பட்டது என்பது உண்மையே. ஆனால் மாணவர்கள் நேரடியான முதலாளித்துவ(மேற்கத்திய) ஆட்சியையே கோரினர். சீன ஆட்சியாளர்களின் அதிகாரவர்க்க,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அரச முதலாளித்துவத்திற்கு எதிராகத்தான் மாணவர்கள் கிளர்ச்சி செய்தனர். கலாச்சார புரட்சிப் பாடல்கள் பாடப்பட்டதன் காரணம் சோசலிசத்தை சீர்குலைத்து முதலாளித்துவத்தை அரங்கேற்றியதன் விளைவால் எழுந்த பாதிப்பே.

1. அமெரிக்கச் சுதந்திரச் சிலையை மாணவர்கள் ஏந்த வழி காட்டியது யார்?
2. அமெரிக்கக் குப்பைகளை யார் சீனாவில் அனுமதித்தது?
3. செக்ஸ் பார்கள், டிஸ்கோ, விபச்சாரம் இவற்றை சீனாவில் அனுமதித்தது யார்?
4. கேடு கெட்ட அமெரிக்கரின் நாகரீகத்திற்கு சீன மக்களை அடிமையாக்கியது யார்?

"**கம்யூனிசம்**" என்ற பெயரில் மோசடி செய்து வரும் இன்றைய கேடு கெட்ட கம்யூனிசத் துரோகிகளான டெங்கும்பலே.

இவற்றையெல்லாம் மறுத்து இலங்கையிலும் ஒரு கும்பல் (வாசகர்கள் கவனிக்க) சீனாவின் ஆட்சி "உண்மையான கம்யூனிச ஆட்சி" என்றும், தமது பொய்களை விற்க தமது கட்சிக்கு "**புதிய ஜனநாயகக் கட்சி** (சூது)" என்று பெயருமிட்டு சீனத் துரோகிகளிடமிருந்து பணம் பெற்று வயிறு வளர்க்கின்றனர். ஈழத்தமிழ் மக்களுக்கு எதிராக ஸ்ரீலங்கா அரசுக்கு சீனா ஆயுதம் வழங்கி-வதை எதிர்க்காத மக்கள் விரோதிகள் தான் இவர்கள். இப்படிப்பட்டவர்களின் துரோகத்தனங்களை மறைத்தும், நியாயப்படுத்துவதற்கென்றே சில புத்தி-ஜீவிகள் ஐரோப்பிய நாடுகளில் தமிழர்கள் மத்தியில் பிரச்சாரம் செய்து வருகிறார்கள்.

இன்றைய சீன ஆட்சியாளர்கள், மற்றும் வீழ்ந்து நொருங்கிய கிழக்கு ஐரோப்பிய ஆட்சியாளர்கள் யாவரும் கம்யூனிசத்திற்குத் துரோகமிழைத்தவர்களே. இவர்களின் கிரிமினல், அதிகார வர்க்க ஆட்சிகள் "கம்யூனிசம்" என்ற போர்வையில் நடைபெற்றதால் வறுமையால் வாடிய மக்கள் கம்யூனிசத்தை வெறுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். மேற்கத்திய முதலாளித்து நாடுகள் இவற்றைக் காட்டி கம்யூனிச எதிர்ப்பு பிரச்சாரங்களை மேற்கொண்டன. கிழக்கு ஐரோப்பிய போலி கம்யூனிஸ ஆட்சியாளர் (பாசிஸ்டுகள்) செய்த துரோகங்கள், பதவி துஷ்பிரயோகம் போன்றவை மேற்குறிப்பிட்ட பிரச்சாரத்திற்கு உரம் ஊட்டின. இவை ஒரு வகையில் முதலாளித்துவத்திற்குச் சேவை செய்துள்ளன.

உலகைப் பங்கு போடும் முயற்சியில் இறங்கிய அமெரிக்க - ரஷ்ய ஏகாதிபத்தியங்கள் உலகை கூறு போட்டன. அமெரிக்காவுடன் மேற்கு ஐரோப்பிய நாடுகளும், ரஷ்யாவுடன் கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் சேர்ந்து உலகை யுத்தப்பீதியில் ஆழ்த்தின. ராணுவத்தை வளர்ப்பதில் மக்களின் உழைப்பை, பொருளாதாரத்தை முடக்கிய ரஷ்யாவும். அசுர


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

- சிறந்த போர்த்தந்திர வல்லுனர்
- சிறந்த கவிஞர், எழுத்தாளர்
- மார்க்சிய-லெனினியத்தைத் தனது சிந்தனையால் வளம் படுத்திய மேதை. (மாவோ சிந்தனைகள்)
- ஏகாதிபத்திய வேட்டைக்காடாக இருந்த சீனாவை விடுவித்து மக்கள் குடியரசை ஸ்தாபித்த அரசியல் தலைவர்.
- மக்களிடமிருந்து கற்று மக்களுக்கு சேவை செய் என்ற மக்கள் தலைவர்
- சர்வதேச ரீதியில் ரஷ்ய திரிபுவாதத் திரிபு எதிராக போராடி, மார்க்சிய-லெனினியத்தைக் காக்க தனது இறுதி நாள் வரை வாழ்ந்த பாட்டாளி வர்க்கத்தின், சர்வதேச கம்யூனிசத் தலைவர்.



# மாஓ சேதுங்

தொங்கு சந்தை நாடுகளும் நெருக்கடிக்குள்ளாகின. அதிகாரவர்க்க கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்களின்(PARTY BOSS) கீழ் மக்கள் கண்மூடித்தனமாகச் சரணடைப்பட்டனர். இவர்களின் ஆட்சியில் கள்ளச் சந்தை, மபியா கும்பல் போன்றவை உருவாகின. 'கம்யூனிசம்' என்ற பெயருடனேயே மேற்கத்திய நாடுகளில் வாழும் செல்வந்தர்களைப் போல வாழ்க்கை நடாத்தினர் கட்சித் தலைவர்கள். PARTY BOSSகள் என்று வெளிநாடுகளில் கிண்டல் செய்யுமளவிற்கு இவர்களின் உதாரித்தனம் தலைவிரித்தாடியது. கட்சித் தலைவர்கள் வெளிநாட்டு வங்கிகளில் பணத்தைப் பதுக்கினர். இதற்குச் சிறந்த உதாரணம் ருமேனியாவின் சர்வாதிகாரி சிசொஸ்கு. இவனது அருமை நண்பர்களில் பெரும்பாலானவர்கள் மேற்கத்திய செல்வந்தர்கள். இவனுடன் உறவுகளை வைத்துக் கொண்ட மேற்கு நாடுகள் அவனின் மரணத்தின் போது அவனை 'கம்யூனிஸ்ட்' என்று இகழ்ந்தார்கள். கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும், ரஷ்யாவில் ஸ்டாலினின் மரணத்தின்

www.tamilarangam.net

பின் வந்த திரிபுவாதிகளை, அவர்களது வாழ்க்கை எப்படியிருந்தது என்பதை மிகவும் கிண்டலுடன் அன்டன் கராட்ஸ் என்பவர் எழுதிய CAFE SOCIETY என்ற சிறுகதையில் வரும் சில பகுதிகள் :

(தொடரும்)

(49ம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கிறார். அதில் ஒன்று வருமாறு,

விடிகள் எண்ணவோ
விண் மீன்களுடன் விளையாடிய போதும்
விரல்கள் எண்ணவோ
இன்றும் ஜன்னல் கம்பிகளுடன் நான்....

மு. மேத்தா ஊர்வலம், கண்ணீர்ப்பூக்கள் தவிர நடந்த-நாடகங்கள், நந்தவன நாட்கள், இதயத்தில் நாற்காலி, காத்திருந்த-காற்று, அவர்கள் வருகிறார்கள், மனச்சிறகு ஒருவானம் இருசிறகுகள் என்னுடைய போதிமரங்கள் போன்ற கவிதைத் தொகுப்புக்களையும், சின்னச் சின்ன முத்திரைகள், பக்கம் பார்த்துப் பேசுகிறேன், புதுக்கவிதைப் போராட்டம் போன்ற கட்டுரை நூல்களையும், சோழநிலா போன்ற சரித்திர நவீனங்களையும் வெளியிட்டுள்ளார்.

இன்றைய எம் புதுக்கவிஞர்களில் மேத்தாவின் பாதிப்பினை நாம் அவதானிக்கக் கூடியதாக இருக்கும். "புதுக்கவிதைப் போராட்டம்" என்ற நூல் இன்று புதுக்கவிதையின் தேங்கிய நிலை பற்றியும் புதுக் கவிதை எதிர்நோக்கும் போராட்ட நிலை பற்றியும் எடுத்து விளக்கு கிறது.

(முற்றும்)

---

அன்பான வாசகர்கட்கு!

உங்களிடமிருந்து தரமான ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்.

சஞ்சீவி ஆசிரியர் குழு.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## குறுக்கெழுத்துப்போட்டி

இல 20

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 இ | 2 | 3 | 4 | ■ | 6 | 7 | 8 மோ |
| 9 | ■ | 11 | 12 | 13 சு | ■ | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | ■ | 23 | ■ |
| 25 | 26 | 27 | ■ | 29 | 30 | ■ | 32 |
| ■ | 34 | ■ | 36 | 37 | 38 | 39 | 40 ன் |
| ■ | 42 | 43 | 44 | ■ | 46 | 47 | 48 |
| 49 சு | ■ | 51 த | 52 | 53 | 54 | 55 | ■ |
| 57 | 58 | 59 | ■ | 61 உ | 62 | 63 | ■ |

உங்கள் பாவனைக்கு:-

அலுவலகப்பாவனைக்கு:-

www.tamilarangam.net

**CHANCHIVE**
**Danmarksgade 10**
**7500 Holstebro**
**Danmark**

c:23 ,No: 20

**afs.**

www.tamilarangam.net

# சஞ்சீவி
## ஆறு மலர்களுக்கான சந்தா

| | |
|---|---|
| Switzerland<br>France<br>Italy<br>London<br>Germany | 25 u$ |
| Canada<br>Australia | 29 u$ |
| Sweden<br>Norwey | 125kr. |
| Danmark | |

காசோலை எடுக்கவேண்டிய கணக்கிலக்கமும், முகவரியும்.

**A/C.NO.7601-408695-3**
**Tamilsk Dansk Venskabs Forening**
**Vestjysk Bank**
**7500-Holstebro,**
**Danmark.**

காசோலை அனுப்பவேண்டிய முகவரி

**CHANCHIVE**
DANMARKSGADE - 10
**7500-HOLSTEBRO,**
**DANMARK.**

> "மறுக்கப்பட்டு, பழக்கமற்றுப்போனதொரு சுதந்திரமான
> கருத்துப்பரிமாற்றலை உருவாக்குவதற்கு
> எல்லோரது கருத்துக்களும்,
> விமர்சனங்களுமே
> வழிவகுக்கும்."

www.tamilarangam.net

**Chanchive**
DANMARKSGADE 10
**7500 Holsterbro**
**Denmark.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்